**கவனிக்க.-** *2011.06.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1712 - 2011 ජුනි මස 24 වැනි සිකුරාදා - 2011.06.24

*1712 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 776 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 787 |


**கவனிக்க.-** (i) மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, யூன் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) இலங்கை உளவியல் கழகம் கூட்டிணைத்தல் சட்டமூலம் 2011, யூன் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, யூலை மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூன் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஆடி மாதம் 25 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, ஆனி 6.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | கொதபெல | பல்லேகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மொறவக் கோரளை மேற்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | கிரின்த புகுல்வெல்ல | கிரின்த மேற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபட பத்துவ பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | திக்வெல்ல | திக்வெல்ல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஹறிஸ்பத்துவ பிரிவில் வெல்லாபட (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | முலதியான | றன்சாகொட பிறப்பு, இறப்பு மற்றும் கந்தபடபத்துவ பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | அக்குரஸ்ஸ | வெலிகம் கோரளை அக்குரஸ்ஸ பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

6-483

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஆடி மாதம் 25 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, ஆனி 1.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | பதவிஸ்ரீபுர | பதவி ஜனபதய பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கட்டுக்குளம் பத்து கிழக்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், திருகோணமலை |

6-550

**சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைச்சாலைக் காவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு -2011**

திறந்த பிரிவு

1. சிறைச்சாலைத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள சிறைச்சாலைக் காவலர் மற்றும் பெண் காவலர் பதவிகளுக்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆண்/பெண் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **வெற்றிடங்களின் எண்ணிக்கையும் வெற்றிடங்களை நிரப்புதலும் :**

2.1 வெற்றிடமாகவுள்ள சிறைச்சாலைக் காவலர் பதவிகளின் எண்ணிக்கை இருநூற்று தொண்ணூறு (290) ஆகும். இவ்வெற்றிடங்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து (95%) திறந்த போட்டிப் பரீட்சையொன்றின் மூலமும் நூற்றுக்கு ஐந்து (5%) சிறைச்சாலைத் திணைக்களத்தில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்றின் மூலமும் நிரப்பப்படுகின்றன. ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற பெண் காவலர்களின் எண்ணிக்கை வெற்றிடமாகவுள்ள பெண் காவலர் பதவிகளின் எண்ணிக்கைக்கு மட்டுப்படுத்தப்படும்.

2.2 எவையேனும் வெற்றிடங்களை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கும் அதிகாரத்தை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

3. **பதவியின் பொறுப்புக்கள்.**- சிறைக் கைதிகளின் பாதுகாப்பு கவனிப்பு மற்றும் சிறைச்சாலை நிறுவனங்களின் நிருவாகத்திற்கு உதவுதல்.

4. **பதவியின் தன்மை.**- இது நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவியொன்றாகும். நியமனங்களைப் பெறுபவர்கள் விதவைகள்/ தபுதாரர் அநாதைப் பிள்ளைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்த வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 14,280-7X145-10X180-17X240-ரூபா 21,175.

6. **சேவை நிபந்தனைகள் :**

6.1 அரசாங்க சேவையில் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஏ/ எஸ்ஏ/3/2/07(01) ஆம் இலக்க 2008.11.18 ஆந் திகதிய கடிதத்தால் சிறைச்சாலை காவலர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் ஏற்பாடுகளுக்கும் அதற்கு செய்யப்பட்ட மற்றும் இதன் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக சிறைச்சாலைக் காவலர் பதவிக்கு நியமனங்கள் வழங்கப்படும்.

6.2 சிறைச்சாலைக் காவலர் பதவியில் நியமனம் பெறுபவர்கள் தீவின் எந்தவொரு சிறைச்சாலை நிறுவனத்திலும் சேவை செய்வதற்கு கடப்பாடுடையவர்களாக உள்ளதுடன் ஆரம்ப பயிற்சிக் காலத்துள் அல்லது பின்னர் அதற்கு 10 வருட கட்டாய சேவைக் காலத்தை விஞ்சுவதற்கு முன்னர் பயிற்சி அல்லது பதவியை கைவிட்டுச் செல்பவர்கள் பயிற்சி சம்பந்தப்பட்ட எல்லா செலவுகளையும் திணைக்களத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

6.3 சிறைச்சாலை காவலர் பதவியில் நியமனம் பெறுபவர்கள் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற விவாகமாகாதவர்களின் அலுவலக வாசஸ்தலங்களில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட காலம் தங்கிநின்று சேவை செய்ய வேண்டும்.

7. **தெரிவுசெய்யப்படும் நடவடிக்கை முறை :**

7.1 உடற்தகைமை பற்றிய பரிசோதனையொன்றில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்களுள் திறந்த பிரிவின் வெற்றிடங்களைப் போல் ஐந்து மடங்குக்கு சமனான விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7.2 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளரால் எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும்.

7.3 ஒவ்வொரு வினாத்தாளுக்கும் நூற்றுக்கு நாற்பது (40%) ஆகிய ஆகக்குறைந்த புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

7.4 இப்பரீட்சையால் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களைப் போல் இரு (02) மடங்குக்கு சமனானதும், எழுத்துப் பரீட்சையில் தகைமை பெறுகின்றதும், எழுத்துப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்றதுமான விண்ணப்பதாரர்கள் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவர்.

7.5 எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளைக் குறிப்பிடாது விண்ணப்பதாரர்களின் குடும்ப பெயரின் முதலெழுத்தின்படி அகராதி முறையே தயார் செய்யப்பட்ட இடாப்பொன்றாக நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெறுபவர்களின் பெயர்ப்பட்டியல் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளரால், சிறைச்சாலை ஆணையாளர் தலைமையதிபதியிடம் வழங்கப்படுகிறது. இவ்விடாப்பு சிறைச்சாலைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

7.6 அவ்விடாப்பின்படி அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் மீண்டும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளரிடம் பெற்றுக்கொடுக்கப்படும்.

7.7 எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைகளில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முழு மொத்தத்தின்படி தயார்செய்யப்பட்ட இடாப்பின் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர் தொடக்கம் முறையே நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களுக்காக நியமனங்களை வழங்குவதற்கு விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

7.8 நேர்முகப் பரீட்சையில் தோற்றிய எல்லா விண்ணப்பதாரர்களும் எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைகளில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்படும்.

7.9 தெரிவுசெய்யும் முறையின் வெளிப்படைத் தன்மையை பேணுவதற்காக இறுதிப் பெறுபேறு வெளியிடும்வரை எழுத்துப் பரீட்சையின் புள்ளிகள் விண்ணப்பதாரர்களுக்கு அல்லது நியமன அதிகாரிக்கு வழங்கப்பட மாட்டாது என்பதுடன், இறுதி மொத்தப் புள்ளிகளை வெளியிட்டதன் பின்னர் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளரால் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகள் விண்ணப்பதாரர்களுக்கு வெவ்வேறாக அறிவிக்கப்படும்.

7.10 எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைகளின்போது வெவ்வேறாக அல்லது மொத்தப் புள்ளிகளாக எத்தகைய புள்ளிகள் இருப்பினும் இவ்வறிவித்தலின் 8.1, 8.2, 8.3 மற்றும் 9 இன்கீழ் குறிப்பிட்டுள்ள தகைமைகளில் எந்தவொரு தகைமையையும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பதாரர்கள் நியமனங்களைப் பெறுவதற்காக தகைமைகள் பெற மாட்டார்கள்.

7.11 நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது நியமனமொன்றைப் பெறுவதற்கான உரித்தல்ல வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இரு (02) மடங்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட அரைவாசிப் பேர்களுக்கு மாத்திரமே நியமனங்கள் கிடைக்கின்றன. பெண் காவலர் ஆட்சேர்ப்பு செய்யப்படுவது அவ்வெற்றிடங்கள் உள்ள எண்ணிக்கைக்கு மாத்திரமே.

**8. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

8.1 அடிப்படைத் தகைமைகள் :

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
(ii) நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டும். துர்நடத்தை சம்பந்தப்பட்ட தவறொன்றுக்காக எந்தவொரு நீதிமன்றத்திடமிருந்தும் தவறாளராக்கப்படாதவராக இருக்க வேண்டும் ;
(iii) சிறந்த உடல் நலம் உடையவராக இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் அலுவலர்களுக்கு இராணுவ சேவைக்குச் சமனான பயிற்சி கட்டாயமாக பெற்றுக்கொடுக்கப்படும்.

8.2 ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

(ii) இரு (02) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- இரு (02) அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் இப்பெறுபேறுகள் பெற்றிருக்க வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு அமர்விலும் ஐந்து (05) பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருக்க வேண்டும்.

8.3 உடற்றகைமைகள் :

8.3.1 உடல் ரீதியில்-

8.3.1.1 ஆண் விண்ணப்பதாரர்கள்

(i) உயரம்.- ஆகக்குறைந்தது ஐந்து (05) அடி நான்கு (04) அங்குலமாக இருத்தல் வேண்டும்.
(ii) மார்பு.- மூச்சுப் பிடிக்காமல் முப்பத்திரண்டு (32) அங்குலமாக இருத்தல் வேண்டும்.

8.3.1.2 பெண் விண்ணப்பதாரர்கள்-

(i) உயரம்.- ஆகக்குறைந்தது ஐந்து (05) அடி இரண்டு (02) அங்குலம்

8.3.2 உடற்றகைமைப் பரிசோதனை.- ஒவ்வொரு வயதுத் தொகுதிக்கான ஆகக்குறைந்த புள்ளிகளை அல்லது ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

9. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று பதினெட்டு (18) வயதுக்குக் குறையாதவராகவும் முப்பது (30) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரச/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்காக இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.

10. **எழுத்துப் பரீட்சை :**

| தொடர் இல. | வினாத்தாள் | பெறக்கூடிய ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக்குறைந்த புள்ளிகள் | காலம் | வினாப் பத்திரத்தின் தன்மை |
|---|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 | 1 மணித்தியாலம் | பல்தேர்வு மற்றும் சிறுவிடைகள் |
| 02 | பொது அறிவு | 100 | 40 | 1 மணித்தியாலம் | பல்தேர்வு மற்றும் சிறுவிடைகள் |

10.1 பாடத்திட்டம் :

10.1.1 நுண்ணறிவுப் பரீட்சை.- விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான கருத்து, அவரின் கருத்துப் பகுப்பாய்வுத் தன்மை, சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலை அளவிடும் வகையில் அமையப்பெற்ற வினாத்தாளாகும்.

10.1.2 பொது அறிவு.- மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், தகவல் தொழிநுட்பம், அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார வளங்கள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியமாகின்ற நூதன விடயங்கள், விஞ்ஞான மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பிலான அவரது அறிவை பரிசோதனை செய்வதற்காக தயார்செய்யப்பட்ட பொது வினாத்தாள் ஒன்றாகும்.

11. **அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை :**

| தொடர் இல. | துறை | பெறக்கூடிய ஆகக்கூடிய புள்ளி |
|---|---|---|
| 01 | விளையாட்டுத்துறை திறமை | 05 |
| 02 | தொழினுட்ப அறிவு | 05 |
| 03 | ஒழுக்க வளர்ச்சி மற்றும் தலைமைத்துவம் | 05 |
| 04 | விடய ரீதியிலான செயலாற்றுகை | 05 |
| 05 | உயர் கல்வித் தகைமைகள் | 05 |
| 06 | நேர்முகப் பரீட்சையில் தோற்றிய விதம் | 05 |

12. **பொய்யான தகவல்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பத்தை நிரப்பும்போது மிகக் கவனமாக உண்மையான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்களின்படி எவரேனும் அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவரெனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகர் தன்மையை இரத்துச்செய்ய முடியும். அபேட்சகர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று பொய்யானதென தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து விலக்க முடியும்.

13. **விண்ணப்பிக்கும் முறை :**

**13.1** விண்ணப்பப்படிவத்தை தயார் செய்தல் :

13.1.1 இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

13.1.2 சாதாரண போட்டோ மாதிரி எடுக்கும் கடதாசியின் அளவின் (21x29 cm/8.5"x12"/ஏ4) இரு பக்கங்களையும் உபயோகித்துக்கொண்டு விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

13.2 விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்தல் :

13.2.1 விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தால் விண்ணப்பப்படிவம் நிரப்பப்படுதல் வேண்டும்.

13.2.2 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.- விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், பிரசித்த நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவர், வருடாந்த சம்பளம் 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட ஆரம்ப வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்கத்தின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

13.2.3 உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக இல்லாத உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதுள்ள மற்றும் முழுமையாக பூர்த்திசெய்யப்படாதுள்ள விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பத்தை பூர்த்திசெய்யப்படாத காரணத்தினால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

13.3 விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :

13.3.1 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சிறைச்சாலைக் காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சை-2011" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

13.3.2 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை 2011.07.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சை திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

13.3.3 அஞ்சலில் காணாமற் போதல் அல்லது 2011.07.08 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

14. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின், அது தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படும். எல்லா விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்கள் மற்றும் இவ்வறிவித்தலில் அடங்கியுள்ள நிபந்தனைகளின்படி செயல்படுவதற்கு கடப்பாடுடையவர்களாவர்.

வீ. ஆர். சில்வா, ஆர். எஸ். பி. யூ. என். டி. யூ. ஐ. ஜி,
மேஜர் ஜெனரல்,
சிறைச்சாலை ஆணையாளர் நாயகம்.

சிறைச்சாலை தலைமையகம்,
கொழும்பு 9,
2011.06.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2011**

திறந்த பிரிவு

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்ற முடியாது)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(ஏற்புடையதான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பதாரர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரத்தை ஒழுங்குமுறை 1, 2, 3 எனக் குறிப்பிடவும். (ஏதேனுமொரு நிலையத்துக்குப் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாதிருப்பின் விருப்பத்தின்படி அடுத்த நகரத்திலுள்ள நிலையத்துக்கு அனுப்பப்படுவர்.)

| நகரம் | விருப்பத்தின் ஒழுங்குமுறை |
|---|---|
| கொழும்பு | |
| கண்டி | |
| அநுராதபுரம் | |
| மட்டக்களப்பு | |
| யாழ்ப்பாணம் | |

(விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்ற முடியாது)

1. பெயர் :

(i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ+ம் : PERERA A. B. C. :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. (i) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

(iii) அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. (i) ஆணா/பெண்ணா என்பது, (பெண்-1, ஆண்-0) : ☐

(ஏற்புடையதான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

(ii) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(iv) விவாகமானவரா/விவாகமாகாதவரா : (விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2) ☐

(ஏற்புடையதான இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

4. (i) உதவி அரசாங்க அதிபர்/பிரதேச செயலாளர் பிரிவு :----.

(ii) பொலிஸ் பிரிவு :----.

(iii) உயரம் :

................ அடி .................. அங்குலம்

(iv) மார்பு :

................ அங்குலம்

5. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரம் :

(i) பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் :----.

(ii) சுட்டெண் :----.

(iii) பரீட்சைப் பெறுபேறு :----.

ஆண்டு :
பரீட்சை சுட்டெண் :

| பாடம் | தரம் | |
|---|---|---|
| | முதலாம் அமர்வு | இரண்டாம் அமர்வு |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

6. நீதிமன்றத்தில் குற்றவாளியாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஏற்புடையதான கூட்டினுள் " ✓ " அடையாளத்தை இடுக. (ஆமெனில் விபரங்களைத் தருக.) :----.

7. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சில பகுதிகளைப் பூர்த்திசெய்யாததினால் மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யாமல் மற்றும் பிழையாகப் பூர்த்திசெய்வதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்திசெய்துள்ளதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) என்னால் வழங்கப்பட்டுள்ள இக்கூற்று எவையேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவனாவேன் எனவும், நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(iii) விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் விண்ணப்பங்களைக் கோரும் வர்த்தமானி அறிவித்தலின் எல்லா விடயங்களையும் நன்றாக வாசித்து விளங்கிக்கொண்டேன் என்றும் அதில் குறிப்பிட்டுள்ள எல்லா விடயங்களுடனும் நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகுவேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(iv) குறிப்பிட்டுள்ள எந்தத் தகவலையும் பின்னர் மாற்றஞ்செய்ய மாட்டேன்.

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் என் முன்னிலையில் ................................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் என்றும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை).
திகதி :----.

அட்டவணை I

| | மாவட்டம் | சிறைச்சாலை நிறுவனம் | சிறைச்சாலை நிறுவனத்தின் முகவரி |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாண விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>யாழ்ப்பாணம் விளக்க மறியற்சாலை,<br>யாழ்ப்பாணம் |
| 2. | திருகோணமலை | திருகோணமலை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>திருகோணமலை விளக்க மறியற்சாலை,<br>திருகோணமலை |
| 3. | அநுராதபுரம் | அநுராதபுரம் விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>அநுராதபுரம் விளக்க மறியற்சாலை,<br>அநுராதபுரம் |
| 4. | பொலன்னறுவை | பொலன்னறுவை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>பொலன்னறுவை விளக்க மறியற்சாலை,<br>பொலன்னறுவை |
| 5. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>மட்டக்களப்பு விளக்க மறியற்சாலை,<br>மட்டக்களப்பு |
| 6. | குருநாகல் | வாரியபொல விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>வாரியபொல விளக்க மறியற்சாலை,<br>வாரியபொல |
| 7. | கம்பஹா | மஹர மறியற்சாலை | சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>மஹர சிறைச்சாலை,<br>ராகம |
| | | நீர்கொழும்பு விளக்க மறியற்சாலை | சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>நீர்கொழும்பு சிறைச்சாலை,<br>நீர்கொழும்பு |
| 8. | கேகாலை | கேகாலை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>கேகாலை விளக்க மறியற்சாலை,<br>கேகாலை |
| 9. | கொழும்பு | புதிய மகஸீன் சிறைச்சாலை | சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>கொழும்பு விளக்க மறியற்சாலை,<br>கொழும்பு 9 |
| 10. | களுத்துறை | களுத்துறை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>களுத்துறை விளக்க மறியற்சாலை,<br>களுத்துறை |
| 11. | கண்டி | போகம்பறை சிறைச்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>போகம்பறை சிறைச்சாலை,<br>கண்டி |
| 12. | பதுளை | பதுளை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>பதுளை விளக்க மறியற்சாலை,<br>பதுளை |
| 13. | இரத்தினபுரி | குருவிட்ட விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>குருவிட்ட விளக்க மறியற்சாலை,<br>குருவிட்ட |
| 14. | மொனறாகலை | மொனறாகலை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர்,<br>மொனறாகலை விளக்க மறியற்சாலை,<br>மொனறாகலை |

| | மாவட்டம் | சிறைச்சாலை நிறுவனம் | சிறைச்சாலை நிறுவனத்தின் முகவரி |
|---|---|---|---|
| 15. | காலி | காலி விளக்க மறியற்சாலை | சிறைச்சாலைக் கண்காணிப்பாளர், காலி விளக்க மறியற்சாலை, காலி |
| 16. | மாத்தறை | மாத்தறை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர், மாத்தறை விளக்க மறியற்சாலை, மாத்தறை |
| 17. | அம்பாந்தோட்டை | தங்காலை விளக்க மறியற்சாலை | உதவி சிறைச்சாலைக் கண்காணிப்பாளர், தங்காலை விளக்க மறியற்சாலை, தங்காலை |

6-559

---

## நீதி அமைச்சு

### மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவி

நீதி அமைச்சில் வெற்றிடமாகவுள்ள மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **கல்வித் தகைமைகள்.-** பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்

மற்றும்

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழிகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்

அல்லது

க. பொ. த. (உ. த.) சிங்களம்/ ஆங்கிலம்/ தமிழ் மொழிகளில் சித்தியடைந்திருத்தல்

தொழிற் தகைமைகள்.- மொழிபெயர்ப்புச் சேவையில் விசேட வகுப்பின் அலுவலரொருவராகவிருத்தல்

உடல் ரீதியிலான தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையானவாறு உடல் ரீதியிலும் உள ரீதியிலும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

3. **பிற தகைமைகள் :**

(அ) (1) விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(2) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் / வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

4. **சம்பள அளவுத்திட்டம்.-** எம்என்-7-2006-ஏ மாதமொன்றுக்கு ரூபா 20,030-11X365-18X500-ரூபா 33,045

5. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்-

6. **சேவை நிபந்தனைகள் :**

(அ) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள்/ அநாதகைள்/ தபுதாரர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கு சந்தாப்பணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் அரச கரும மொழிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தற்போதுள்ளதும் இதற்குப் பின்னர் விதிக்கப்படுகின்றதுமான சட்டதிட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். அதேபோல் தாபனக் கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருக்கும் மற்றும் வழங்கப்படுகின்ற கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். தாபனக் கோவையின் II அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையதாகும்.

(இ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியிலான தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் அரசாங்க வைத்திய பரிசோதனையொன்றில் சித்திபெறுதல் வேண்டும்.

(ஈ) 2009.02.20 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

7. இவ்வறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கத்திலும் முதலாம் பக்கத்தில் 01-14 வரையிலும் இரண்டாம் பக்கத்தில் மிகுதியுமாக விண்ணப்பங்களைத் தயார் செய்து தமது திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவர்களினூடாக 2011.07.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி

வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "நீதி அமைச்சின் மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும் :-

செயலாளர்,
நீதி அமைச்சு.
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12.

8. நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை. :

| புள்ளிகள் வழங்கப்படவேண்டிய துறைகள் | மொத்தப் புள்ளிகள் | சித்திபெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| **1. கல்வித் தகைமைகள் :** | | |
| (i) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளை பிரதான மொழியொன்றாக பட்டத்திற்காக கற்றிருத்தல் (உச்ச புள்ளிகள் 15) | | |
| (ii) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொண்ட டிப்ளோமா ஒன்றுக்கு (உச்ச புள்ளிகள் 15) | 45 | |
| (iii) ஒரு சட்டத்தரணியாக விருத்தல்/சட்டம் பற்றிய பட்டதாரியாயின் (உச்ச புள்ளிகள் 15) | | |
| **2. சேவை அனுபவம் :** | | |
| (i) மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட வகுப்பின் அனுபவம் (10 புள்ளிகள்) | | |
| (ii) (ஆண்டொன்றுக்கு 02 புள்ளிகள் என்ற அடிப்படையில் 5 வருடங்களுக்காக) | | |
| (iii) மொழிபெயர்ப்பாளர் ஒருவராக நீதித் துறையில் சேவை அனுபவம் (20 புள்ளிகள்) (ஆண்டொன்றுக்கு 4 புள்ளிகள் என்ற அடிப்படையில் 5 வருட காலத்துக்கு) | 30 | 40 |
| **3. மேலதிக தகைமைகள் - கணனி :** | | |
| தேசிய தொழிற் திறமை மட்டம் 1-4 புள்ளிகள் தேசிய தொழிற் திறமை மட்டம் 2-8 புள்ளிகள் தேசிய தொழிற் திறமை மட்டம் 3-12 புள்ளிகள் தேசிய தொழிற் திறமை மட்டம் 4-16 புள்ளிகள் தேசிய தொழிற் திறமை மட்டம் 5-20 புள்ளிகள் | 20 | |
| 4. நேர்முகப் பரீட்சை சபையின் தற்றுணிபின்படி தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொலைத்தொடர்புத் திறமை | 05 | |

9. சரியாகப் பூர்த்திசெய்யப்படாததும், அடிப்படைத் தகைமைகள் இல்லாததும் மற்றும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்றதுமான விண்ணப்பங்கள் எவ்வித முன் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுமென்பதுடன், விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்புடைய எந்தவொரு ஆவணமும் தபாலில் காணாமற்போனது தொடர்பாக செய்யப்படுகின்ற எந்தவொரு முறைப்பாடும் கவனத்திற் கெடுக்கப்பட மாட்டாது.

10. எவரேனும் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தில் ஏதேனும் பொய்யான தகவலொன்று இருப்பதன் காரணமாக அவர் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவார்.

இதில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை நீதி அமைச்சின் செயலாளர் கொண்டுள்ளார்.

சுகத கே. கமலத்,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவி

இலக்கம் ....................................

(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

(ஆ) முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) :----.
முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) :----.

4. தொலைபேசி இலக்கம் :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. ஆணா/பெண்ணா என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

9. இனம் :----.

10. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? என்பது :----.

11. பட்டம் பற்றிய விபரம் :----.

பட்டம் :----.

பாடங்கள் :----.

பல்கலைக்கழகம் :----.

மொழிமூலம் :----.

பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.

12. மொழிபெயர்ப்புச் சேவையின் விசேட வகுப்புக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
அனுபவம் :----.
வருடங்கள் :----.

13. நீதித்துறையில் மொழிபெயர்ப்பாளர் ஒருவராக சேவை அனுபவம் :----.
வருடங்கள் :----.

எத்தனை ஆண்டுகள் என்பது :----.

14. பிற கல்வித் தகைமைகள் :

(i) ..........................................
(ii) ..........................................
(iii) ..........................................

15. மொழித் தேர்ச்சி ............................ (சம்பந்தப்பட்ட கூட்டினுள் "✓" அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம்<br>தமிழ்<br>ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

.................................................... ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்றும், உண்மையானவை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டோ வினைத்திறமையின்மேல் சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை எனவும் பதவியை விட்டுச்சென்ற ஒருவராக கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

இதில் அடங்கியுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்றும் தெரிவுசெய்யப்பட்ட வின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ...................................................... தற்போது இவ்வமைச்சில்/திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் சேவையின் விசேட வகுப்பின் அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் எனவும் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

6-626

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2011

1.0 இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர் களுக்கான I வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2011, ஒகத்து மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும்.

2.0 **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்**.- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது கீழ் குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ள டங்கிய வினாப்பத்திரங்களை கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 3 மணித்தியாலங்கள் வீதம் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் என்பதுடன் தேர்வடையும் பொருட்டு தேவைப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும். சகல பாடங்களுக்கும் ஒரே தவணையிலோ அல்லது பல தவணைகளிலோ அமரும் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கு அனுமதியுண்டு.

2.1 **முதலாவது வினாப்பத்திரம்** - பாட இலக்கம் 1 - பொருளாதார அபிவிருத்தி, வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள் :

(i) பொருளாதார அபிவிருத்தி
(ii) வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள்

*2.2* **இரண்டாவது வினாப்பத்திரம்** *- பாட இலக்கம் 2 - தாபனக் கோவைகள், நிதிப்பிரமாணம் மற்றும் அலுவலக முறைமை :*

(i) *அலுவலக முறைமை :*
*(அலுவலக முறையின் முக்கியத்துவம், கோட்பாடுகள், கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பில் செயற்படுதல், ஆவணங்களில் பதிவுகளை மேற்கொள்ளுதல், பொது மக்களுடன் செயற்படுவது தொடர்பான விளக்கங்கள்)*

(ii) *தாபனக்கோவை* - (I, II, III, IV, VII, XII, XIV, XV, XXV *(அத்தியாயங்கள்)* )

*நிதிப்பிரமாணங்கள்* - (I, II, III, XIII *(அத்தியாயங்கள்)*)

*3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை சுயமாக தயாரித்துக்கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாளின் இரு பக்கங்களில் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப் படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப் படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப்படும். அவ் விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.*

*4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்டச் செயலாளர்/பிரதேச செயலாளர்) பிரிவுகளில் இணைக்கப் பட்டிருப்பின் அதனை (மாவட்ட செயலாளர்/மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2011.07.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 4 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதிப்பத்திரத்தினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்து இலங்கை சமுர்த்தி அதிகார சபைக்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.*

*6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-*

(I) *ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;*
(II) *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப் பத்திரம்).*

*7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விடுவிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன்/அவள் உள்ளாக வேண்டி வரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப் படுவது அவன்/அவள் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.*

*8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதிப் பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.*

*9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*ஆர். பீ. பி. திலகசிரி,*
*பணிப்பாளர் நாயகம்.*

*இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,*
*4 ஆம் மாடி, செத்சிரிபாய,*
*பத்தரமுல்லை.*

**இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2011**

*(அலுவலக உபயோகத்துக்கு)*

*பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-*
*சிங்களம் - 2, தமிழ் - 3 (உரிய கூட்டினுள் எழுதவும்)*

*1. பெயர் :-*

*1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக் களுடன் பெயர் :-----.*
*(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)*
*உதா.:* SILVA, A. B.

1.2 முழுப்பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2. நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.1 நிரந்தர முகவரி : -----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.2 அலுவலக முகவரி :-----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

3. பெண்/ஆண் :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது:

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

8. பதவியும் தரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு இசைவதாகவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

6-416/1

## இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2011

1.0 இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் V ஆம் மற்றும் VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2011, ஓகத்து மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையில் I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேறிய சமுர்த்தி முகாமை யாளர்கள் அமர முடியும்.

2.0 **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்**.- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது 3 மணித்தியால வினாத்தாளைக் கொண்டதாகும். மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையானது 100 ஆகும் என்பதுடன் சித்திபெறும் பொருட்டு பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

இலங்கையின் கிராமிய மற்றும் பிரதேச அபிவிருத்திகள் உள்ளடங்கிய நிகழ்கால அபிவிருத்தி நடவடிக்கைகள், இலங்கையில் வணிக வங்கிகளும் நிதி நடவடிக்கைகளும், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல், வறுமை ஒழிப்பு, சமுர்த்தி வேலைத்திட்டத்தினை கட்டியெழுப்புதல், மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்கீழ் கமநெகும வேலைத்திட்டம் உள்ளடங்கிய விண்ணப்பதாரிகளின் படைப்பாக்க ஆற்றலையும் தெளிவினையும் அளவை செய்து பார்ப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும்.

3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாள்களில் மட்டுமே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ்விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அங்கு தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர் பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அதனை மாவட்டச்செயலாளர்/மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2011.07.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும்

பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவுசெய்த பற்றுச் சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதிப்பத்திரத்தினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(I) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(II) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப் பத்திரம்).

7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக வேண்டி வரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவ தற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப்பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, "செத்சிரிபாய",
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2011**

[ ]
(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :- [ ]
சிங்களம் - 2, தமிழ் - 3 (உரிய கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத் துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
உதா.: SILVA, A. B.

1.2 முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2. நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.1 நிரந்தர முகவரி : -----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.2 அலுவலக முகவரி :-----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

3. பெண்/ஆண் :
பெண் - 1
ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

6. பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது:
வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

8. பதவியும் தரமும் :-----.

9. முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேறிய ஆண்டு : [ | | | ]

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு இசைவதாகவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

-----,
(விண்ணப்பதாரியின் கையொப்பம்)

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

6-416/2

---

**இலங்கை சமுர்த்தி அதிகாரசபை**

VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆம் தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2011

1. இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளராக 06 வருட சேவைக்காலத்தினைக் கொண்டுள்ள முகாமையாளர்களை V ஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2011, ஓகத்து மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும்.

2. இப்பரீட்சையானது 03 வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

2.1 நுண்ணறிவும் பொது விவேகமும்.- இது பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளும் ஆற்றலையும் தர்க்கரீதியான விவேகத்தினையும் உடனடியாக சிந்திக்கும் ஆற்றலையும் பற்றிக் கண்டறியும் ஒரு வினாத்தாளாகும்.

* புள்ளிகள் : 100
* நேரம் : 1 1/2 மணித்தியாலம்
* சித்தி பெறும் பொருட்டு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

2.2 கமநெகும மற்றும் சமுர்த்தி விடயம் பற்றிய அறிவு.- இதற்குரிய வினாத்தாள் சில பகுதிகளைக்கொண்டதாக (A, B, C, D மற்றும் E என்ற வகையில்) நடாத்தப்பட வேண்டியதுடன் வினாத்தாளின் முதலாவது பகுதி சகல சமுர்த்தி முகாமையாளர்களும் பொதுவாக விடையளிக்கக் கூடிய சமுர்த்தி வேலைத்திட்டமும் கமநெகும வேலைத் திட்டத்துடன் சார்ந்த பொது விடயங்களும் உள்ளடங்கியதாக தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும்.

வினாத்தாளின் ஏனைய பகுதிகள் தெரிவுசெய்து விடையளிக்கக்கூடிய விதத்தில் இருக்க வேண்டியதுடன் அந்த ஒவ்வொரு பகுதியும் வங்கிச்சங்க, மகாசங்க முகாமையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள், தலைமையக முகாமையாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள முகாமையாளர்கள் மற்றும் தலைமை அலுவலக முகாமையாளர்களுக்கு அவர்கள் மேற்கொள்கின்ற அலுவல்களையும் விடய அறிவினையும் சார்ந்ததாக தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும்.

நேரம் : 1 1/2 மணித்தியாலம்
புள்ளிகள் : 100
சித்திபெறும் பொருட்டு பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் : 40 ஆகும்.

**2.3 நிதிப் பிரமாணங்கள், தாபனக்கோவைகள் மற்றும் ஏனைய குறித்த நகல் பற்றிய அறிவும் பொது அறிவும் பற்றிய வினாத்தாள்:-**

இது தாபனக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் குறித்த நகல்களில் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாயங்கள் பற்றி முகாமையாளர்களின் பொது அறிவை அளவிடும் வினாத்தாளொன்றாகும். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட அத்தியாயங்களில் தாபனக்கோவையின் I, II, III, IV, VII, XII, XIV, XV, XVV அத்தியாயங்களும் நிதிப்பிரமாணத்தில் I, II, III, XII ஆகிய அத்தியாயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

நேரம் : 1 1/2 மணித்தியாலம்
புள்ளிகள் : 100
சித்திபெறும் பொருட்டு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் : 40 ஆகும்.

3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாள்களில் மட்டுமே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்துதல்

வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ்விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அங்கு தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/பிரதேச செயலாளர்) பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அதனை மாவட்ட செயலாளர்/மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்/ பிரதேச செயலாளர்கள்/ பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2011.07.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் “பிரதி பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிப் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை” என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட் அனுமதிப்பத்திரம்).

7. பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக வேண்டிவரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளைக் கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்கு தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப்பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்குள் உட்படாத ஏதேனும் விடயமொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, செத்சிரிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சமுர்த்தி அதிகாரசபை**

**VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களை V ஆவது தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2011**

Competitive Examination for Grade VI Samurdhi Managers to Promote to Grade V - 2011

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :--.

(உதா.: NIMAL J. M. D.)

1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்).

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3. பெண்/ஆண் :

3.1 பால் :

பெண் - 1, ஆண் - 0 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா :

விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. தேசிய அடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐

6. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

8. பதவியும் தரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும், விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங் களுக்கு இசைவதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

6-416/3

---

## கல்வி அமைச்சு

### ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றைப் பயிலுவதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2012

1.0 தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டு கால சேவை முன் தொழிற்பயிற்சி ஒன்றைப் பயிலுவதற்குத் தேவையான கல்வித் தகைமைகளையும் தகுதிகளையுமுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகவுத்திறன்**.- சகல விண்ணப்பதாரர்களும்-

2.1 இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
2.2 சிறந்த ஒழுக்கமும் உறுதியான உடல், உளநலமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
2.3 வயது:
2.3.1 2012.01.01 ஆந் திகதியன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
2.3.2 கத்தோலிக்க/கிறிஸ்தவ நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மதகுருமாருக்கான வயதெல்லை 2012.01.01 இல் 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
2.3.3 பௌத்த மதநெறிக்கு விண்ணப்பிக்கும் புத்த சமய மதகுருமார்கள் 2012.01.01 இல் 27 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.
2.4 விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**3. அடிப்படை கல்வித் தகைமைகள் :**

3.1 2010 ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்காக இரண்டு பாடங்களில்) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(தொழில்நுட்பக் கல்வி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிப்போர் 4.12 பகுதியில் கவனிக்கவேண்டியன என்ற அம்சத்தையும் கத்தோலிக்க/கிறிஸ்தவ பயிற்சி நெறியின் மதகுருமார் 4.9 பகுதியில் கவனிக்கவேண்டியன எனும் அம்சத்தையும் வாசிக்கவும்).

3.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் /ஆரம்பப் பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உள்ளிட்ட பிரதான 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (முதலாவது தடவையில் குறைந்தபட்சம் பிரதான 05 பாடங்களிலேனும் சித்தியடைந்திருக்க வேண்டும்.)

பிரதான பாடங்கள் :

(i) சமயம்
(ii) முதலாம் மொழி
(iii) ஆங்கிலம்
(iv) கணிதம்
(v) அழகியற்கலை (சித்திரம், நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும்/இலக்கியம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு)
(vi) விஞ்ஞானமும் தொழிநுட்பமும்
(vii) சமூகக்கல்வியும் வரலாறும்
(viii) தொழிநுட்பப் பாடம் (விவசாயம், வியாபாரம் மற்றும் கணக்கீடு, கைப்பணி வேலைகள்)

3.3 அவ்வப் பாடநெறிகளுக்குரிய க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் விசேட தகைமைகள் மேலே 3.2 இற்கமைய இரு அமர்வுகளிலும் பூரணப்படுத்தாதுவிட்டால் மூன்றாவது அமர்விலே பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். (விசேட தகைமை தொடர்பாக கருத்திற்கொள்ளப்படுவது 3.1 மற்றும் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் ஆகும்.) விசேட தகைமை தொடர்பாக விசேடமாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் கருத்திற்கொள்வது 3.1 மற்றும் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

3.4 **ஆங்கில மொழிப் பாடநெறி மற்றும் ஆங்கில மொழிமூலப் பாடநெறிக்கான ஆங்கில மொழித் தேர்ச்சி :**

3.4.1 ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி (C)/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

3.4.2 ஆங்கில மொழிப் பாடநெறிக்காக விண்ணப்பிப்பவர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிசேட திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழி ஒரு பாடமாக சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு திறமைச்சித்தி/ ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருப்பது போதுமானது. இது எவ்வாறாக இருப்பினும் திறமைகளைப் பரிசீலனை செய்யும் பரீட்சையில் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பல விண்ணப்பதாரர்களிடையே ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டியேற்படும்போது உரிய விண்ணப்பதாரர்களின் முதற்தடவையாக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றிய பெறுபேற்றை கருத்தில் கொள்ளப்படும். விசேட சித்திக்கு 04 புள்ளிகளும், அதி திறமைச் சித்திக்கு 03 புள்ளிகளும், திறமைச் சித்திக்கு 02 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 01 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதானமாக 08 பாடங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

3.4.3 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்ற போதிலும், சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் க. பொ. த. (உயர்தர) பயின்ற மாணவர்களில் இருந்து ஆட்சேர்க்கப்படும்.

3.5 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து கல்வி/தொழில் சான்றிதழ்களதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னரான தினமொன்றாக இருத்தல் வேண்டும்.

**4. கல்வித் தகைமைகளும் வேறு விசேட தகைமைகளும்.**- தேசிய கல்விக் கல்லூரிகளில் உள்ள ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் பொருத்தமான கல்வித் தகைமைகளும் ஏனைய விசேட தகைமைகளும் பின்வருமாறு :

4.1 **பாடநெறி இலக்கம் 1** - ஆரம்பக்கல்வி - (சிங்களம்)
ஆரம்பக் கல்வி - (தமிழ்)

4.1.1 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ் உட்பட மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு சிங்களம்/தமிழ் உட்பட இரண்டு பாடங்களில்) சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

*4.1.2 சிங்களம்/தமிழ் மொழி மற்றும் மேலும் 02 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**கவனிக்க வேண்டியது :**

*2013 ஆம் ஆண்டுக்கு தேசிய கல்விக் கல்லூரிகளில் ஆரம்பப் பாடநெறிக்கு ஆட்சேர்க்கையில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டியது கட்டாயமாக்கப்படும்.*

** ஆரம்பக் கல்வி பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அப்பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் நியமன தினத்திலிருந்து ஐந்து வருடகாலத்துக்கு அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கடமையாற்ற வேண்டும்.*

*4.2* ***பாடநெறி இலக்கம் 02*** *- விஞ்ஞானம் - (சிங்களம்)*
*விஞ்ஞானம் - (தமிழ்)*
*விஞ்ஞானம் - (ஆங்கிலம்)*

*4.2.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு உயிரியல் பாடத்துடன் மேற்குறித்த இரண்டு பாடங்களில்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

*மற்றும்*

*4.2.2 சிங்கள/தமிழ் மொழியில் சித்தி மற்றும் கணிதம் 32 அல்லது கணிதம் 42 பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

**கவனிக்க வேண்டியது :**

*விஞ்ஞானம் (ஆங்கில மொழி) பாடநெறிக்காக :*

(i) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.2.1 மற்றும் 4.2.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து ஆங்கில மொழிமூலம் க. பொ. த. (உ.தரம்) பயின்ற விண்ணப்பதாரிகளில் 50% மும்,*

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.2.1 மற்றும் 4.2.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து சிங்கள/தமிழ் மொழி மூலம் க. பொ. த. (உ.தரம்) பயின்ற விண்ணப்பதாரிகளில் 50% மும் தேர்ந்தெடுக்கப்படுவர் :*

*(1) வகுதியில் போதியளவிலான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் அவ்விடங்களுக்கான வெற்றிடங்கள் ;*
*(2) வகுதியின் கீழே தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து நிரப்பப்படும்.*

*4.3* ***பாடநெறி இலக்கம் 03*** *-கணிதம் (சிங்களம்)*
*கணிதம் (தமிழ்)*
*கணிதம் (ஆங்கிலம்)*

*4.3.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்கு கணித பாடவிதானத்திற்குரிய கணிதம், இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் ஆகிய ஒரு பாடத்துடன் மேற்கூறப்பட்ட இரண்டு பாடங்களில்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*மற்றும்*

*4.3.2 சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியுடன் 34 விஞ்ஞானப் பாடத்திற்கு திறமைச்சித்தியுடன் பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

**கவனிக்க வேண்டியது** : *கணிதம் (ஆங்கில மொழி) பாடநெறிக்காக :*

(i) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.3.1 மற்றும் 4.3.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து ஆங்கில மொழி மூலம் க. பொ. த. (உ.தரம்) பயின்ற விண்ணப்பதாரிகளில் 50% மும்,*
(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 4.3.1 மற்றும் 4.3.2 தகுதிகளைப் பூர்த்திசெய்து சிங்கள/தமிழ் மொழி மூலம் க. பொ. த. (உ. தரம்) பயின்ற விண்ணப்பதாரிகளில் 50% மும் தேர்ந்தெடுக்கப்படும்.*

*(1) வகுதியில் போதியளவிலான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் அவ்விடங்களுக்கான வெற்றிடங்கள் ;*
*(2) வகுதியின் கீழே தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளிலிருந்து நிரப்பப்படும்.*

*4.4* ***பாடநெறி இலக்கம் 04 -*** *உடற்கல்வி (சிங்களம்)*
*உடற்கல்வி (தமிழ்)*

*4.4.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.*

*மற்றும்*

4.4.2 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, சுகாதாரம் மற்றும் உடற்கல்வி, கணிதம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

4.4.3 அங்கீகரிக்கப்பட்ட மெய்வல்லுனர் போட்டிகள் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு தொடர்பான தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். வேறுபட்ட விளையாட்டுக்கள் அல்லது நிகழ்ச்சிகள் அல்லது செயற்பாடுகள் மூன்றுக்கு ஆகக்கூடுதலாக 75 புள்ளிகள் பின்வரும் ஒழுங்குமுறைக்கு அமைய வழங்கப்படும்.

**முன்னுரிமையடிப்படையில் விளையாட்டுக்கள் அல்லது நிகழ்ச்சிகளின் தொடர்**

| தொடர் இல. | மட்டம் | தனி | குழு | இடம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சர்வதேச மட்டம் | தனி | - | 1 | 25 |
| 2 | சர்வதேச மட்டம் | தனி | - | 2 | 24 |
| 3 | சர்வதேச மட்டம் | தனி | - | 3 | 23 |
| 4 | சர்வதேச மட்டம் | - | குழு | 1 | 22 |
| 5 | சர்வதேச மட்டம் | - | குழு | 2 | 21 |
| 6 | சர்வதேச மட்டம் | - | குழு | 3 | 20 |
| 7 | சர்வதேச தேசிய பிரதிநிதி | தனி | குழு | - | 19 |
| 8 | தேசிய மட்டம் | தனி | - | 1 | 18 |
| 9 | தேசிய மட்டம் | தனி | - | 2 | 17 |
| 10 | தேசிய மட்டம் | தனி | - | 3 | 16 |
| 11 | தேசிய மட்டம் | - | குழு | 1 | 15 |
| 12 | தேசிய மட்டம் | - | குழு | 2 | 14 |
| 13 | தேசிய மட்டம் | - | குழு | 3 | 13 |
| 14 | மாகாண மட்டம் | தனி | - | 1 | 12 |
| 15 | மாகாண மட்டம் | தனி | - | 2 | 11 |
| 16 | மாகாண மட்டம் | தனி | - | 3 | 10 |
| 17 | மாகாண மட்டம் | - | குழு | 1 | 9 |
| 18 | மாகாண மட்டம் | - | குழு | 2 | 8 |
| 19 | மாகாண மட்டம் | - | குழு | 3 | 7 |
| 20 | ரெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர்/ அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 1 | - | - | - | 6 |
| 21 | சனாதிபதி சாரணியமும், பெண் சாரணியமும் | - | - | - | 6 |
| 22 | சார்ஜன்ட் மேஜர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 2 | - | - | - | 5 |
| 23 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 1 | 6 |
| 24 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 2 | 5 |
| 25 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | தனி | - | 3 | 4 |
| 26 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 1 | 3 |
| 27 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 2 | 2 |
| 28 | மாவட்ட/வலய மட்டம்/ பிரதேச செயலக மட்டம் | - | குழு | 3 | 1 |

4.4.4 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு தோற்றி சித்தி பெற்றிருப்பின் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும் :

A சித்தி - 05
B சித்தி - 03
C சித்தி - 02

**கவனிக்கவேண்டியது :**

(i) ***அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் (சர்வதேச மட்டம்)*** - *கல்வியமைச்சு/விளையாட்டு அமைச்சு அவற்றில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கூடாக (சதுரங்கம், கரம், டாம் தவிர) இலங்கை தேசிய குழுவினை அல்லது பாடசாலை விளையாட்டுக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றியிருத்தல். (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)*

(ii) ***அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி*** - *கல்வியமைச்சு/விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.*

*மாகாணக் கல்வியமைச்சு/மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாகாண மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்.*

*மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்/மாகாண கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி வலய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.*

(iii) *விளையாட்டு அமைச்சில் அல்லது கல்வியமைச்சில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களினூடாக ஒழுங்குசெய்யப்பட்ட* "A" *தரத்திலான போட்டிகளில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.*

(iv) *விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முன்னதான ஐந்து வருடங்களில் பெறப்பட்ட விளையாட்டு தேர்ச்சிகள் செல்லுபடியாகும்.*

(v) *விளையாட்டுச் சான்றிதழ்கள் மூன்றுக்கு புள்ளி வழங்கும்போது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வயது மட்டத்தில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் அதிகூடிய ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.*

*4.5* ***பாடநெறி இலக்கம் 05 – ஆங்கிலம்***

*4.5.1 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலம் (பொது ஆங்கிலம் அல்ல) உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன், சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் /லண்டன் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*அல்லது*

*4.5.2 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அத்துடன் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் /லண்டன் க. பொ. த. சாதாரணப் பரீட்சையிலும் அல்லது ஆங்கிலத்தில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில்* (S) *சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் தமிழ்/சிங்கள மொழி, கணிதம் உட்பட ஆறு பிரதான பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*அல்லது*

*4.5.3 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் அத்துடன் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிதிறமைச் சித்தி* (B)*/ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன்* (C) *தமிழ் அல்லது சிங்களமொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.*

**கவனிக்கவேண்டியது :**

(i) *தெரிவுசெய்வதில் ஆங்கிலப் பயிற்சி நெறியில் மேலே 4.5.1, 4.5.2 பிரிவுகளில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளுக்கு அந்த ஒழுங்கின் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்படும். இவர்கள் தேர்ச்சி பரீட்சைக்கு தோற்ற வேண்டியதில்லை. நேர்முகப்பரீட்சையில் தகைமைகள் நிரூபிக்கப்படல் வேண்டும்.*

(ii) *4.5.3 இன் கீழ் தகுதிபெறுவோர் தேர்ச்சி பரீட்சைக்கு பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்.*

**4.6 பாடநெறி இலக்கம் 06 – பௌத்த சமயம்**

பௌத்த சமயப் பாடநெறிக்கு பௌத்த மதகுருமாரும் சாதாரண விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்கலாம். சகல தேவைகளும் 2010 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். (குறைபாடுள்ள விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் யாவும் 2010 அல்லது அதற்கு முன் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.)

4.6.1 2010 ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் பௌத்த சமயம், பௌத்த நாகரீகம், பாலி, சிங்களம் ஆகியவற்றில் இரு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.6.2 பிராச்சீன, ஆரம்பப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (பௌத்த மதகுருமாருக்கு மாத்திரம்)

4.6.3 பௌத்த தர்மாச்சாரிய பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.6.4 சமயப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.6.5 க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், சிங்களம், புத்த சமயம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்/சிங்கள மொழி, கணிதம், திரிபீடகம் உட்பட ஆறு பாடங்களில் அடிப்படை பிரிவெனா இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனிக்கவேண்டியது** : தெரிவு ஒழுங்கு முறை :

(அ) 4.6.1, 4.6.2, 4.6.3, 4.6.4, 4.6.5 உட்பட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.6.1, 4.6.2, 4.6.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.6.1, 4.6.3, 4.6.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.6.1, 4.6.4, 4.6.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(உ) 4.6.1, 4.6.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

**4.7 பாடநெறி இலக்கம் 07 - இந்து சமயம்**

4.7.1 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் இந்து சமயம், இந்து நாகரிகம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒரு பாடம் உட்பட எல்லாமாக மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.7.2 சைவ சித்தாந்த பண்டிதர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.7.3 சைவப் புலவர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.7.4 இளம் சைவப் புலவர் பத்திரம் பெற்றிருத்தல்.

4.7.5 க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ்மொழி, கணிதத்துடன் இந்துசமயம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்கவேண்டியது**.- தெரிவு ஒழுங்கு முறை :

(அ) 4.7.1, 4.7.5 ஆகிய இரண்டு உட்பட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.7.1, 4.7.4, 4.7.5 ஆகிய மூன்று சான்றிதழ்களுடன் ஏனைய இரண்டு சான்றிதழ்களுடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.7.1, 4.7.5 ஆகிய இரண்டுடன் ஏதாவதொரு சான்றிதழ் பெற்ற (விண்ணப்பதாரிகளும்) 4.7.1 சான்றிதழ் பெற்றவர்களும்.

(ஈ) 4.7.1, 4.7.5 சான்றிதழ்கள் பெற்ற விண்ணப்பதாரிகள்.

மேற்கூறிய தகைமைகளை 2010 இல் அல்லது அதற்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.

*4.8* ***பாடநெறி இலக்கம் 08 – இஸ்லாம்***

*4.8.1* *2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம், அறபு ஆகிய பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*4.8.2* *அல் ஆலிம் ஆரம்ப ஆரம்ப பரீட்சையிலும், இறுதிப் பரீட்சையிலும் சகல பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள்.*

*4.8.3* *மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் அல் ஆலிம் ஆரம்ப பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.*

*4.8.4* *மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்.*

*4.8.5* *க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ்மொழி, கணிதத்துடன் இஸ்லாம் சமயம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

***கவனிக்க வேண்டியது**.- தெரிவு ஒழுங்கு முறை :*

*(அ)* *4.8.1, 4.8.2, 4.8.3, 4.8.4 மற்றும் 4.8.5 ஆகிய சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(ஆ)* *4.8.1, 4.8.3, 4.8.4 மற்றும் 4.8.5 ஆகிய சான்றிதழ்கள் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(இ)* *4.8.1, 4.8.4 மற்றும் 4.8.5 ஆகிய சான்றிதழ்கள் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(ஈ)* *4.8.1 மற்றும் 4.8.5 ஆகிய சான்றிதழ்கள் உள்ள விண்ணப்பதாரிகள்.*

*மேற்கூறிய தகைமைகளை 2010 இல் அல்லது அதற்கு முன்னர் பெற்றிருத்தல் வேண்டும்.*

*4.9* ***பாடநெறி இலக்கம் 09 – றோமன் கத்தோலிக்கம்/கிறிஸ்தவம் (சிங்களம்)***
***றோமன் கத்தோலிக்கம்/கிறிஸ்தவம் (தமிழ்)***

*4.9.1* *2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.*

*மற்றும்*

*சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் பிரதான ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் கிறிஸ்தவ சமயப் பாடத்தில் சாதாரண சித்தி அல்லது க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கத்தோலிக்கம்/கிறிஸ்தவ சமயப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.*

*மற்றும்*

*விண்ணப்பதாரி கத்தோலிக்கம்/ கிறிஸ்தவ சமயப் பாட ஆசிரியராவதற்குரிய தகைமையுள்ளதாக கத்தோலிக்கர்களுக்கான பங்குத்தந்தை உறுதிப்படுத்துவதுடன், கிறிஸ்தவர்களுக்காக தேசிய கிறிஸ்தவ சபையினதும் சான்றிதழைப் பெற்றிருத்தல்.*

*4.9.2* *கத்தோலிக்க சமயத்துக்கு விண்ணப்பிப்பவர்களின் தெரிவுகள் பின்வரும் தகைமைகளுக்கமைய முன்னுரிமை ஒழுங்கின்படி நடைபெறும் :*

*4.9.2.1* *தேசிய கத்தோலிக்க மத்திய நிலையத்தினால் நடாத்தப்படும் 4 வருடகால பாடநெறிச் சான்றிதழ் ;*

*அல்லது*

*4.9.2.2* *தேசிய கத்தோலிக்க மத்திய நிலையத்தினால் கிறிஸ்தவ வழிகாட்டல் தொடர்பான பாடநெறிச் சான்றிதழ் ;*

*அல்லது*

*4.9.2.3* *தேவதர்ம நிலையத்தினால் நடாத்தப்படும் 3 வருட சமய கல்வி பாடநெறிச் சான்றிதழ் ;*

*அல்லது*

4.9.2.4 துறவியாவதற்கான சமயக் கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகத் தொடர்ந்து பூர்த்திசெய்த துறவிப் பீடத்தின் பொறுப்பாளர் அல்லது உரிய மறை மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ;

அல்லது

4.9.2.5 தேசிய தர்ம உபதேச நிலையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க தர்மாச்சாரியார் (சமய ஆசிரியர்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அதாவது

தர்மாசிரியர் கௌரவ (சமய ஆசிரியர் 3)
அல்லது
தர்மாசிரியர் கௌரவ (சமய ஆசிரியர் 2)
அல்லது
தர்மாசிரியர் கௌரவ (சமய ஆசிரியர் 1)
அல்லது

4.9.2.6 க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் கிறிஸ்தவ சமயப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

4.9.3 கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யும் ஒழுங்குமுறை கீழ் குறிப்பிடப்பட்டவாறு நடைபெறும் :-

4.9.3.1 பிலிமத்தலாவையில் உள்ள இலங்கை தேவதர்ம சாஸ்திர கலாசாலையில் டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல்.

4.9.3.2 தேசிய கிறிஸ்தவ கவுன்சிலினால் நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**கவனிக்கவேண்டியது :**

(i) சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 90% தெரிவின்போது 4.9.1 இன் கீழ் தகைமையுள்ள கத்தோலிக்க விண்ணப்பதாரிகளுள் 4.9.2 இன்கீழ் காட்டப்பட்டுள்ள முன்னுரிமைப்படி தெரிவு இடம்பெறும். 90% கத்தோலிக்க விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்களுக்கு கிறிஸ்தவ மத விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) 10 வீதமான வெற்றிடங்கள் மேலேயுள்ள 4.9.1 இன் கீழ் தகைமையுள்ள கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகளுள் 4.9.3 இன் கீழ் தரப்பட்டுள்ள ஒழுங்கு முறைப்படி தெரிவு இடம்பெறும். 10 வீதமான கிறிஸ்தவ விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்கள் கத்தோலிக்க சமயத்தவர்களுக்கு வழங்கப்படும்.

(iii) 40 வீதமான கல்விக் கல்லூரி அனுமதிகள் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதகுருமார்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர். 40% வீதமான மதகுரு விண்ணப்பதாரிகள் இல்லையாயின் அவ்வெற்றிடம் ஏனைய விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படும்.

(iv) மதகுருமார் விண்ணப்பதாரிகளில் 2010 ஆம் வருடம் உயர்தரம் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2009, 2008, 2007, 2006 மற்றும் 2005 ஆம் ஆண்டுக்கு தொடராக அண்மித்த வருடங்களைக் கருத்திற்கொண்டு (உ. த.) சித்தியடைந்த மதகுருமார்கள் விண்ணப்பதாரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும்.

4.10 **பாடநெறி இலக்கம் 10 – விசேட கல்வி : (சிங்களம்)**
**விசேட கல்வி : (தமிழ்)**

4.10.1 2010 ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

4.10.2 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்கவேண்டியது**.- இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சியின் பின்னர் விஷேட கல்வித் தேவைகளுடைய செவிடர், குருடர், மந்தபுத்தி, ஒடிசம், கற்றல் குறைபாடுகள், பல்வேறு பலவீனங்கள் போன்ற துறைகளுக்கு ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படுவதற்கு கருத்திற்கொள்ளப்படும். எனவே, மேற்கூறப்பட்ட விஷேட கல்வித் தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்ற வகுப்பறைகளில் சேவையாற்றுவதற்கு இணங்குகின்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

***4.11 பாடநெறி இலக்கம் 11 – விவசாய மற்றும் உணவுத் தொழிநுட்பம் (சிங்களம்)***
***விவசாய மற்றும் உணவுத் தொழிநுட்பம் (தமிழ்)***

*4.11.1 2010 ஆம் ஆண்டு நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் விவசாயம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*அல்லது*

*4.11.2 2010 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் விவசாயம்/ விவசாய தொழில்நுட்பவியல்/ உயிரியல் - வள தொழிநுட்பம்/உணவு தொழிநுட்பம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

*மற்றும்*

*4.11.3 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் சிங்களம்/ தமிழ்மொழி உட்பட பிரதான 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

***கவனிக்கவேண்டியது***.- *மாணவர்களை சேர்த்துக்கொள்ளும்போது 4.11.1 தகைமை கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*2013 ஆம் ஆண்டுக்கு தேசிய கல்விக் கல்லூரிகளில் விவசாய மற்றும் உணவுத் தொழிநுட்ப பாடநெறிக்கு ஆட்சேர்க்கையில்-*

(i) *க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், விவசாயம்/ விவசாய மற்றும் உணவுத் தொழிநுட்ப பாடங்களுக்கு திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டியது கட்டாயமாக்கப்படும்.*

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விவசாயம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தியெய்தல் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற விவசாயக் கல்லூரியொன்றில் ஒரு வருடம் அல்லது அதற்கு மேல் விவசாய பாடநெறியொன்றினைத் தொடர்ந்து திருப்திகரமாக பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

***4.12 பாடநெறி இலக்கம் 12 – தொழில்நுட்பக் கற்கை (சிங்களம்)***
***தொழில்நுட்பக் கற்கை (தமிழ்)***

*4.12.1 ஆக்கவியல் மற்றும் தொழில்நுட்பவியல் :*

*4.12.1.1 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பாடத் தொடருக்குரிய வன்பொருள் தொழில்நுட்பவியல், உள்ளீட்டுக்குரிய சிவில் தொழில்நுட்பவியல், இயந்திரோபகரண தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் இலத்திரனியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*அல்லது*

*4.12.1.2 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.12.1.3 கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி, நிர்மாணத் தொழில்நுட்பம்/இயந்திரத் தொழில்நுட்பம்/ மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் ஆக்கவியல் மற்றும் தொழிநுட்பவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.12.1.4 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி/ தேசிய தொழில்நுட்ப பயிலுநர் சபை/ தொழிற்பயிற்சி அதிகாரசபை/நெசவுக் கைத்தொழில் திணைக்களம்/கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினால் மற்றும் ஏனைய மத்திய அரசு அல்லது மாகாண சபையொன்றின் அமைச்சு ஒன்றின்கீழ் பரிபாலிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற முறையான சான்றிதழுடன் கூடிய 10 மாதங்களுக்கு குறையாத குறிப்பிட்ட பாடநெறியோடு தொடர்புடைய தொழில்நுட்பக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

*4.12.2 சிற்பக்கலை :*

*4.12.2.1 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

*4.12.2.2 கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி, சிற்பக்கலை/ கலா சிற்பம் உட்பட பிரதான 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*மற்றும்*

4.12.2.3 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக்கல்லூரி/தேசிய தொழில் பயிலுநர் சபை/தொழிற்பயிற்சி அதிகார சபை/நெசவுக் கைத்தொழில் திணைக்களம்/கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினால் மற்றும் ஏனைய மத்திய அரசு அல்லது மாகாண சபையொன்றின் அமைச்சு ஒன்றின்கீழ் பரிபாலிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற முறையான சான்றிதழுடன் கூடிய 10 மாதங்களுக்கு குறையாத குறிப்பிட்ட பாடநெறியோடு தொடர்புடைய தொழில்நுட்பக்கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**கவனிக்கவேண்டியவை :**

(i) தேர்ந்தெடுப்பதற்கான முன்னுரிமைத் தொடர்-

* **ஆக்கவியல் மற்றும் தொழில்நுட்பவியல்.-**

(அ) 4.12.1.1 மற்றும் 4.12.1.3 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்

(ஆ) 4.12.1.2, 4.12.1.3 மற்றும் 4.12.1.4 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்

அவ்வாறிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட (அ), (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2009, 2008 ஆம் வருடங்களில் (அ) அல்லது (ஆ) தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் தொடருக்கமைய கருத்திற்கொள்ளப்படும்.

* 2015 ஆம் வருடத்துக்காக தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆக்கவியல் மற்றும் தொழினுட்பவியல் பாடநெறிக்காக 4.12.1.1 இன்கீழ் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 4.12.1.4 இன்கீழ் காட்டப்பட்டுள்ள பத்து மாதத்துக்கு குறையாத பாடநெறியொன்றை பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

* **சிற்பக்கலை.-**

(அ) 4.12.2.1, 4.12.2.2 மற்றும் 4.12.2.3 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்

(ஆ) 4.12.2.1 மற்றும் 4.12.2.2 சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகள்

அவ்வாறிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து, 2009, 2008 ஆம் வருடங்களில் (அ) தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் தொடருக்கமைய கருத்திற்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாகவும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மாத்திரம் மேலே (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் 2010, 2009, 2008 இல் தகைமை பெற்றவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்வதற்காக கருத்திற்கொள்ளப்படும்.

(ii) விண்ணப்பத்தில் 16.1 படி விண்ணப்பிக்கும் பாடநெறி நிர்மாணத் தொழில்நுட்பம்/ சிற்பக்கலை எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக சகல தகைமைகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

**4.13 பாடநெறி இலக்கம் 13 – சித்திரம் (தமிழ்)**

4.13.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்திரப் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

4.13.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் சித்திரம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.13.3 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்திரம்/ சித்திரமும் சிற்பமும் தொடர்பாக பெற்ற தரங்களுக்கமைய மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.

**4.14 பாடநெறி இலக்கம் 14 - நடனம் (பரதம்)**

4.14.1 2010 ஆம் ஆண்டில் நடந்த (க. பொ. த.) உயர்தரப் பரீட்சையில் பரத நடனம் உட்பட மூன்று பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பரத நடனம் உட்பட இரண்டு பாடங்களில்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

4.14.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் பரத நடனம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.14.3 2010 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடத்திற்காக பெற்றுள்ள தரத்திற்கமைய மேலதிக புள்ளி வழங்கப்படும்.

**கவனிக்கவேண்டியது**.- (ஶ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2010 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரேயமர்வில் இரண்டு பாடங்களுடன் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் பரத நடனப் பாடத்திற்கு திறமைச்சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் கவனத்திற் கொள்ளப்படும்.)

**4.15 பாடநெறி இலக்கம் 15 – சங்கீதம் (கர்நாடகம்)**

4.15.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ.த.) பரீட்சையில் கர்நாடக சங்கீதம் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஶ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்காக கர்நாடக சங்கீதம் உட்பட 02 பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.15.2 க. பொ. த. (சா.த.) பரீட்சையில் தமிழ்மொழி, கணிதம் மற்றும் கர்நாடக சங்கீதம் உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.15.3 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடத்திற்காக பெற்றுள்ள தரத்தினடிப்படையில் மேலதிக புள்ளி வழங்கப்படும்.

**கவனிக்கவேண்டியது**.- (ஶ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்காக உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் போதியளவு இல்லாத பட்சத்தில் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் 02 பாடங்களில் சித்தியடைந்திருத்தலோடு க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கர்நாடக சங்கீதப் பாடத்திற்கு திறமைச்சித்தி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் கருத்திற்கொள்ளப்படுவர்.)

**4.16 பாடநெறி இலக்கம் 16 – மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்) :**

4.16.1 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதம் உட்பட 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

ஆங்கில மொழியில் திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

4.16.2 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

கல்வியியல் நிறுவக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பாக ஐந்தாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல். (செயற்பாடு மற்றும் பிரயோக ரீதியில்)

அல்லது

க. பொ. த. (உ. த.) மேற்கத்தேய சங்கீதப் பாடம் மேலதிக பாடமாக சித்தியடைந்திருக்க வேண்டும்.

**கவனிக்க வேண்டியது** :

(i) மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்பட்ட பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்தை பெற்றிருத்தல்

(ii) அப்பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கும்போது மேற்கூறப்பட்ட 4.16.1 இன் கீழ் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**4.17 பாடநெறி இலக்கம் 17 – நாடகமும் அரங்கியலும் (தமிழ்) :**

4.17.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நாடகம், அரங்கியல் பாடம் உட்பட 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.2 தமிழ்மொழி, கணிதம், நாடகமும் அரங்கியல்/நடனம்/சித்திரம்/சங்கீதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.17.3 2010 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நாடகம், அரங்கியல் பாடத்தில் பெற்றுள்ள தரத்தின் அடிப்படையில் மேலதிகப் புள்ளி வழங்கப்படும்.

**கவனிக்க வேண்டியது :** ஆட்சேர்ப்பின்போது ஏதாவதொரு மாவட்டத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் நாடகம், அரங்கியல் பாடத்தில் சித்தியெய்தியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். யாதும் ஒரு மாவட்டத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் நாடகம், அரங்கியல் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு எண்ணிக்கையுடையதாக இல்லாதபட்சத்தில் மட்டும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் நடனம்/சங்கீதம்/சித்திரம் பாடங்களில் சித்தியெய்திய விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக கருத்திற்கொள்ளப்படும்.

**4.18 பாடநெறி இலக்கம் 18 - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்) :**

4.18.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எவையேனும் 3 பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு 2 பாடங்கள்) சித்திபெற்றிருத்தல்

மற்றும்

4.18.2 ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் கணிதப் பாடத்திற்குத் திறமைச் சித்தியுடன் சிங்களம்/தமிழ் மொழி உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**கவனிக்க வேண்டியது.-**

(i) இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுக்கும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் (தயவுசெய்து 6.1.2 வாசகத்தைப் பார்க்கவும்)

(ii) இந்தப் பரீட்சைப் பத்திரம் புறவய வகையான வினாக்களைக் கொண்ட 1-1/2 மணித்தியால வினாத்தாளாகும். இதன் மூலம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறியைத் தொடர்வதற்கு அவசியமென கருதப்படும் அடிப்படை கணித எண்ணக்கருக்கள் தொடர்பான விண்ணப்பதாரியின் தேர்ச்சியை அளவிடும் வினாத்தாளாகும்.

(iii) தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்கு விண்ணப்பதாரர்கள் சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் தோற்ற வேண்டும்.

(iv) தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்கு தோற்றும் மொழி விண்ணப்பப் படிவத்தில் 1.0 வாசகத்தில் (மொழி S/T/E பிரிவில்) குறிப்பிட வேண்டும்.

**4.19 பாடநெறி இலக்கம் 19 - தாய்மொழி (சிங்களம்)**

4.19.1 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் சிங்களப் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.19.2 சிங்கள மொழிக்கு திறமைச் சித்தி மற்றும் கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.20 பாடநெறி இலக்கம் 20 - தாய்மொழி (தமிழ்)**

4.20.1 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு தமிழ் உட்பட 2 பாடங்கள், க. பொ. த. (உ. த) பரீட்சையில் தமிழ் மொழிக்கு திறமைச் சித்தியெய்தியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.20.2 தமிழ் மொழிக்கு திறமைச் சித்தி மற்றும் கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.21 பாடநெறி இலக்கம் 21 – இரண்டாம் மொழி (சிங்களம்)**

4.21.1 இரண்டாம் மொழி சிங்களப் பாடநெறியின் விண்ணப்பதாரர்கள் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழிக்கு திறமைச் சித்தி உட்பட 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

4.21.2 க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

(**கவனத்திற் கொள்ள வேண்டும்**.- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும்போது க. பொ. த. (சா. த.) பரீட்சையின் இரண்டாம் மொழி தமிழ்ப் பாடம் அல்லது அரசகரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி உயர் பாடநெறி அல்லது விருப்பத்திற்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த தொடருக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்)

**4.22 பாடநெறி இலக்கம் 22 - இரண்டாம் மொழி (தமிழ்) :**

4.22.1 இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறி விண்ணப்பதாரர்கள் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ்மொழிக்கு திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

4.22.2 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், தமிழ் மொழி உட்பட பிரதான 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(**கவனத்திற் கொள்ள வேண்டியது**.- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும்போது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது அரச கரும மொழிகள் திணைக்களத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறியில் சித்தியடைந்த அல்லது விருப்பத்திற்குரிய சிங்களப் பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சித்தியடைந்த தொடருக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.)

**4.23 பாடநெறி இலக்கம் 23 - மனைப் பொருளியல் (சிங்களம்) :**
**மனைப் பொருளியல் (தமிழ்) :**

4.23.1 2010 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மனைப்பொருளியல் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

4.23.2 விஞ்ஞானப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், சிங்களம்/தமிழ்மொழி உட்பட பிரதான ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**4.24 பாடநெறி இலக்கம் 24 – சமூகவியல் (தமிழ்) :**

4.24.1 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உ.த.) பரீட்சையில் வரலாறு, அரசியல், புவியியல் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒன்று உட்பட 03 பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு 02 பாடங்கள்) சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

4.24.2 சமூகக்கல்வி மற்றும் வரலாற்றுப் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் தமிழ்மொழி மற்றும் கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.25 பாடநெறி இலக்கம் 25 - வணிகமும் கணக்கியலும் (சிங்களம்)**
**வணிகமும் கணக்கியலும் (தமிழ்)**

4.25.1 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் கணக்கியல் மற்றும் வணிகக்கல்வி உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.25.2 வணிகமும் கணக்கியலும்/முயற்சியாண்மைக் கல்வி/கணித பாடத்திற்கு திறமைச் சித்தி மற்றும் ஆங்கில மொழிக்கு திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தி உட்பட க. பொ. த. (சா.த) பரீட்சையில் பிரதான ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.0 பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியல் கல்லூரிகள் அவற்றின் இலக்கத்துடன் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளன :-

(தயவுசெய்து இப்பட்டியலை நன்கு வாசிக்கவும். நேர்முகப் பரீட்சையின்போது ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய கணனிப் பட்டியலை தயாரிக்கும்போது தங்களது விண்ணப்பம் கணனிப்படுத்தப்படுவது பாடநெறி இலக்கத்திற்கு அமையவே. சரியான தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் கல்வி அமைச்சின் கல்விக்கல்லூரிகள் பிரிவிற்கு சமர்ப்பித்த பின் எவ்வித மாற்றமும் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.) :-

(i) நிரல் - பாடநெறி இலக்கம்
(ii) நிரல் - பாடநெறியின் பெயர்
(iii) நிரல் - சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள்
(iv) நிரல் - தமிழ் மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள்
(v) நிரல் - ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள்

(தேசிய கல்வியியல் கல்லூரிகள், அதன் இலக்கத்துடன் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன.)

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியல் கல்லூரிகள், அவற்றின் இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) |
| 1 | ஆரம்பக்கல்வி | (1) ஊவா<br>(7) சிவனொளிபாத<br>(11) புலதிஸ்புர<br>(12) வயம்ப<br>(14) ருகுணு<br>(17) ஹாபிடிகம | (6) வவுனியா<br>(7) சிவனொளிபாத<br>(8) அட்டாளைச்சேனை<br>(15) யாழ்ப்பாணம்<br>(16) தர்காநகர் | |
| 2 | விஞ்ஞானம் | (2) நில்வளா<br>(5) சியனை<br>(7) ஸ்ரீபாத | (6) வவுனியா<br>(7) ஸ்ரீபாத<br>(8) அட்டாளைச்சேனை<br>(9) மட்டக்களப்பு<br>(15) யாழ்ப்பாணம் | (2) நில்வளா<br>(5) சியனை<br>(15) யாழ்ப்பாணம் |
| 3 | கணிதம் | (2) நில்வளா<br>(5) சியனை<br>(7) ஸ்ரீபாத | (6) வவுனியா<br>(7) ஸ்ரீபாத<br>(8) அட்டாளைச்சேனை<br>(9) மட்டக்களப்பு<br>(15) யாழ்ப்பாணம் | (2) நில்வளா<br>(5) சியனை<br>(15) யாழ்ப்பாணம் |
| 4 | உடற்கல்வி | (1) ஊவா | (6) வவுனியா | |
| 5 | ஆங்கிலம் | | | (3) மகாவலி<br>(10) பஸ்துன்ரட்ட<br>(15) யாழ்ப்பாணம் |
| 6 | பௌத்த சமயம் | (4) சாரிபுத்த<br>(17) ஹாபிடிகம | | |
| 7 | இந்து சமயம் | | (6) வவுனியா | |
| 8 | இஸ்லாம் | | (8) அட்டாளைச்சேனை | |
| 9 | றோமன் கத்தோலிக்கம்/<br>கிறிஸ்தவம் | (12) வயம்ப | (6) வவுனியா | |
| 10 | விசேட கல்வி | (17) ஹாபிடிகம | (8) அட்டாளைச்சேனை | |
| 11 | விவசாய மற்றும்<br>உணவுத் தொழிநுட்பம் | (11) புலதிஸ்புர | (6) வவுனியா | |
| 12 | தொழில் நுட்பக் கற்கை | (5) சியனை | (9) மட்டக்களப்பு | |
| 13 | சித்திரம் | | (9) மட்டக்களப்பு | |
| 14 | நடனம் (பரதம்) | | (7) ஸ்ரீபாத<br>(15) யாழ்ப்பாணம் | |
| 15 | சங்கீதம் (கர்நாடகம்) | | (7) ஸ்ரீபாத<br>(15) யாழ்ப்பாணம் | |
| 16 | மேற்கத்தேய சங்கீதம் | | | (3) மகாவலி |
| 17 | நாடகமும் அரங்கியலும் | | (15) யாழ்ப்பாணம் | |

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியல் கல்லூரிகள், அவற்றின் இலக்கம் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) |
| 18 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | | (7) ஸ்ரீபாத<br>(13) ருவான்புர<br>(16) தர்காநகர் |
| 19 | முதலாம் மொழி (சிங்களம்) | (12) வயம்ப | | |
| 20 | முதலாம் மொழி (தமிழ்) | | (7) ஸ்ரீபாத<br>(8) அட்டாளைச்சேனை | |
| 21 | இரண்டாம் மொழி (சிங்களம்) | (3) மகாவலி | | |
| 22 | இரண்டாம் மொழி (தமிழ்) | | (3) மகாவலி | |
| 23 | மனைப் பொருளியல் | (14) ருகுணு | (16) தர்காநகர் | |
| 24 | சமூகவியல் | | (7) ஸ்ரீபாத<br>(9) மட்டக்களப்பு | |
| 25 | வணிகமும் கணக்கியலும் | (12) வயம்ப | (6) வவுனியா | |

**கவனிக்க வேண்டியது :**

(i) தமிழ்மொழி மூலம் பாடநெறி நடத்தப்படுகின்ற தர்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பெண் விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

(ii) சித்திரம், நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் மற்றும் சமூகவியல் ஆகிய பாடநெறிகள் தமிழ் மொழிமூலம் மாத்திரம் நடைபெறும்.

(iii) மேலைத்தேய சங்கீதம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழிமூலம் மாத்திரம் நடைபெறும்.

**6. 2012 ஆம் ஆண்டிற்காக பயிலுனர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்குமுறைகள் :**

6.1 தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை :

6.1.1 2015 ஆம் ஆண்டில் பாடசாலை முறைமைக்கு அமைவான ஆசிரியர் தேவையை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

6.1.2 சேர்த்துக்கொள்வதற்கான அடிப்படை 'Z' புள்ளி தகைமையாகும். ஆங்கிலம்/தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ உடற்கல்விப் பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கும்போது திறமைப் பரீட்சை/ விளையாட்டு தகைமைக்கமைய தேர்ந்தெடுக்கப்படும். திறமை/விளையாட்டுத் திறமை ஒரே புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படும்போது உரிய விண்ணப்பதாரிகளின் முதற்தடவையாக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு தோற்றிய பெறுபேறு கருத்தில் கொள்ளப்படும். விசேட சித்திக்கு 4 புள்ளிகளும், அதி திறமைச் சித்திக்கு 3 புள்ளிகளும், திறமைச் சித்திக்கு 2 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 1 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்த புள்ளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதானமாக 8 பாடங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரியைத் தவிர ஏனைய சகல கல்விக் கல்லூரிகளிலும் நடாத்தப்படும் ஆரம்பக் கல்வி பாடநெறி தவிர அனைத்து பாடநெறிகளுக்காக தேசிய மட்டத்தில் 30% உம் கஷ்டப் பிரதேச மட்டத்தில் 70% உம் தேர்ந்தெடுக்கப்படும். ஆரம்பக் கல்வி பாடநெறிக்காக தேசிய மட்டத்தில் 50% உம், கஷ்டப் பிரதேச மட்டத்தில் 50% உம் தேர்ந்தெடுக்கப்படும்.

6.1.3 விஞ்ஞானம், கணிதம், மேற்கத்தேய சங்கீதம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளை ஆங்கில மொழி மூலம் வணிகமும் கணக்கியலும் சிங்களம்/ தமிழ் மொழிகளில் கற்க விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஆங்கில மொழி பாடத்தில் திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியும், ஆங்கில பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தி/ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியுடன், சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம் உட்பட பிரதான 06 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைவது அவசியமாகும்.

6.1.4 உடற்கல்வி, சங்கீதம் (கர்நாடகம்), நடனம் (பரதம்) மற்றும் மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் தகைமை தொடர்பாக திருப்திகரமான தகைமை மட்டத்தை அடைய வேண்டும்.

6.2 ***கஷ்ட மாவட்ட அடிப்படை :***

6.2.1 கஷ்ட மாவட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளப்படுவது கல்வி வசதிகளை பகிர்ந்தளிக்கும் அடிப்படையில் கஷ்டம் எனக் கருத்திற்கொள்ளப்படும் 17 மாவட்டங்களுக்குரிய விண்ணப்பதாரர்கள் மூலமாகும்.

(மாத்தளை, முல்லைத்தீவு, அநுராதபுரம், நுவரெலியா, வவுனியா, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, பதுளை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மொனராகலை, கிளிநொச்சி, அம்பாறை, இரத்தினபுரி, மன்னார், புத்தளம்)
அவ்வவ் மாவட்டங்களில் அவ்வவ் மொழி மூலம் 2010 க.பொ.த.(உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை விகிதாசாரத்திற்கமைய சகல பாடநெறிக்கும் அவ்வவ் மாவட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

6.2.2 அவ்வவ் கஷ்ட மாவட்டங்களுக்காக போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் வேறு மாவட்டங்களிலிருந்து வெற்றிடம் நிரப்பப்படும்.

6.2.3 ***மாவட்டத்தைத் தீர்மானித்தல் :***

6.2.3.1 ஏதாவதொரு பாடசாலை பரீட்சார்த்தியின் மாவட்டமாக அமைவது முதலாவது தடவையில் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய மாதத்திற்கு முன்னைய மாதம் வரை 05 வருடங்கள் அல்லது கூடுதலான காலம் (2 1/2 வருடங்களுக்கு மேற்பட்ட) அவர் கற்ற பாடசாலை/பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

6.2.3.2 ஏதாவதொரு தனிப்பட்ட பரீட்சார்த்தி இதற்கு முன்னர் பாடசாலை பரீட்சார்த்தியாக முதற்தடவையாக க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையை விட்டுச் சென்றுள்ள சந்தர்ப்பத்தில் அப்பரீட்சார்த்தியின் மாவட்டம் முதற்தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

6.2.3.3 ஏதாவதொரு தனிப்பட்ட பரீட்சார்த்தி ஏதாவதொரு முறையில் பாடசாலை அபேட்சகராக க.பொ.த. (உ.த.) பரீட்சைக்கு முன்னர் தோற்றிய பாடசாலையை விட்டுச் சென்றுள்ள சந்தர்ப்பத்தில் அப் பரீட்சார்த்தியின் மாவட்டமாக அமைவது க.பொ.த. (உ.த.) பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றிய முன்னரான மாதத்தின் இறுதித் தினம் வரையுள்ள 05 வருடத்திற்கு மேற்பட்ட காலம் (2 1/2 வருடத்திற்கு மேற்பட்ட காலம்) கல்வி கற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டமாகும்.

6.2.3.4 பாடசாலையில் கல்வி கற்காத தனிப்பட்ட பரீட்சார்த்தியாக இருப்பின் கிராம சேவை உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலாளரின் சத்தியக் கடதாசி அல்லது தேர்தல் திணைக்களத்தின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் மாத்திரம் மேற்கூறப்பட்ட மாவட்டத்தின் வசிப்பிடத்தை உறுதிசெய்ய வேண்டும்.

6.3 ***ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல் :***

6.3.1 வெற்றிட எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்களும் 25% சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்கள் மூலமும் நிரப்பப்படும்.

6.3.1.1 தோட்டப் பாடசாலைகள் அமைந்துள்ள மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களின் அளவை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களில் 35% மொனராகலை, பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாட்டவங்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

6.3.2 தமிழ் மொழி மூல பாடநெறிக்காக 75% உம் சிங்கள மொழி மூல பாடநெறிக்காக 25% உம் தேர்ந்தெடுக்கப்படும்.

6.3.3 ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் சிங்கள மொழி மூலமும், ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், கர்நாடக சங்கீதம், பரத நடனம், முதலாம் மொழி (தமிழ்), சமூகவியல் ஆகிய பாடநெறிகள் தமிழ்மொழி மூலமும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆங்கில மொழி மூலமும் நடைபெறும். (ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரியில் நடைபெறுவது மேலே குறிப்பிட்ட பாடநெறிகள் மட்டுமே).

6.3.4

6.3.4.1 ஸ்ரீபாத தேசியக் கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி மற்றும் குருநாகல் ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத் துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மாத்திரம் ஆகும். தற்பொழுது பெருந்தோட்டங்களில் சேவைபுரிகின்றவர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6.3.4.2 பெருந்தோட்டத் துறையில் சேவை புரிகின்ற பிள்ளைகள் போதுமானதாக இல்லையெனின், தற்பொழுது தோட்டப் பகுதிகளில் சேவைபுரியாவிடினும் 2001 அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் தோட்டப்பகுதிகளில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் தொடர்ந்து சேவைபுரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும். (2010, 2009, 2008 ஆகிய வருடங்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.)

6.3.4.3 ஏதாவது தமிழ்மொழி மூலபாடநெறியொன்றுக்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரிகளில் தகைமை பெறுகின்ற போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வதிகின்ற தோட்டப் பகுதிகளில் வேலை செய்யாத என்றாலும் இந்திய வம்சாவளி உடைய விண்ணப்பதாரிகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும்.

6.3.4.4 அதற்கேற்ப, போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் வேறு மாவட்டங்களில் வதிகின்ற இந்திய வம்சாவளி உடைய தமிழ்மொழி மூல விண்ணப்பதாரர்கள் கருத்திற்கொள்ளப்படும்.

6.3.4.5 தோட்டப் பகுதிகளில் வேலை செய்யாத பெருந்தோட்ட மாவட்டங்களில் வதிகின்ற இந்திய வம்சாவளி உடைய தமிழ் மொழி மூல விண்ணப்பதாரிகள் மற்றும் வேறு மாவட்டங்களில் வதிகின்ற இந்திய வம்சாவளி உடைய தமிழ் மொழி மூல விண்ணப்பதாரிகள் அவர்கள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் கட்டாயமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6.3.4.6 சிங்கள மொழிமூல பாடநெறிகளுக்கு பெருந்தோட்ட மாவட்டங்களில் வதிந்துள்ள தோட்டப்பகுதி வதிவாளர்களின் பிள்ளைகள் போதியளவான எண்ணிக்கை இல்லையென்றால் மீதமுள்ள வெற்றிடங்களை ஏனைய தேசிய கல்விக் கல்லூரிகளில் அந்தப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து Z புள்ளியின் அடிப்படையில் பூர்த்திசெய்யப்படும்.

6.3.5 அரச மற்றும் பதிவுசெய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் என உறுதிசெய்வதற்காக தோட்டப் பொறுப்பாளரின் கடிதம் (ஊழியர் சேவையாற்றிய கால எல்லையுடன்) 05 வருடங்கள் அல்லது அதனைவிட அதிகரித்த காலம் தோட்டங்களில் வேலை செய்கின்ற மற்றும் நிரந்தரமாக வதியக்கூடியவர் என/தோட்ட சேவையில் சேவைபுரிந்து ஓய்வுபெற்ற வருடம் மற்றும் திகதி தெளிவாக குறிப்பிடப்படுகின்ற, தோட்ட அதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் அவசியமாகும். பயிற்சிக்குப் பின்னர் தோட்டப் பிரிவின் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கட்டாய சேவையாற்றுவதாக உறுதியளிக்கும் கடிதம் மற்றும் ஊழியர் நலன்புரி நிலையத்திற்கு அறவிடுவதற்காக பதிவு இலக்கத்துடன் உறுதிசெய்யக்கூடிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரரின் மாவட்டத்தை தீர்மானிக்கும் அடிப்படையை காட்டுகின்ற 6.2.2 வாசகம் ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுக்கும்போது உரியதாக்கிக்கொள்ளப்படும்.

6.3.6 உரிய சகல மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு விண்ணப்பதாரியேனும் தேர்ந்தெடுக்க கருத்திற்கொள்ளப்படும்.

**குறிப்பு**.- சிங்கள மொழி மூலம் கல்வி கற்கும் இந்திய வம்சாவளி விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழி மூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

**7. தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள் :**

7.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதிசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு சமர்ப்பிக்கத் தயாராக இருக்க வேண்டும். வெற்றிட எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

7.2 சகல சான்றிதழ்களினதும் முதற்பிரதிகளை நேர்முகப் பரீட்சைத் தினத்திற்கு சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள்.

7.3 பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்துகொள்ள விண்ணப்பதாரர்களுக்கு இருக்கவேண்டிய உடல் உள பொருத்தப்பாடுகள் தொடர்பாக சிக்கலான நிலைமை காணப்படும் பட்சத்தில் அந்நிலைமை தொடர்பாக நேர்முகப் பரீட்சைச் சபை திருப்தியடையாத பட்சத்தில் விசேட நேர்முகப் பரீட்சைச் சபைக்கு உட்படுத்தி அதன் அறிக்கையை கல்வியியல் கல்லூரி சபைக்கு சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் தீர்மானம் அமுல்படுத்தப்படும்.

7.4 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய தேசிய கல்விக் கல்லூரியில் பதிவுசெய்வதற்குரிய தினம் தொடக்கம் 03 நாட்களுக்குள் பதிவுசெய்துகொள்ளாத பட்சத்தில் சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அவர் இழக்கவேண்டி ஏற்படும். இதன் அடிப்படையில் ஏற்படக்கூடிய வெற்றிடம் திறமைத் தொடருக்கமைய நிரப்பப்படும்.

7.4.1 எனவே உரிய தினத்திற்கு பதிவுசெய்யாத விண்ணப்பதாரர்கள் பின்னர் மேற்கொள்ளும் கோரிக்கைகள் தொடர்பாக எக்காரணம் கொண்டும் கருத்திற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

7.5 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் உள தேகாரோக்கியம் கொண்டவர் என பரிசீலனை செய்வதற்காக கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ள முன்னர் வைத்திய பரிசோதனைக்கு உட்பட வேண்டும்.

7.6 ஏதாவதொரு பாடநெறிக்கு/தேசிய கல்விக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அப்பாடநெறி/தேசியக் கல்விக் கல்லூரியை மாற்றியமைக்க சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. ஏதாவதொரு பாடநெறிக்கு போதியளவு மாணவர் எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பத்தில் அண்மையில் உள்ள கல்விக் கல்லூரிக்குரிய பாடநெறியைத் தொடர மாற்றியமைக்கப்படும்.

7.7 ஏதாவதொரு பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கும்போது க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே "Z" புள்ளியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் தேர்ந்தெடுக்கவேண்டிய வெற்றிட எண்ணிக்கையை அதிகமாக இருப்பின் உரிய விண்ணப்பதாரர்களின் முதற்தடவையாக க.பொ.த.(சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய பெறுபேற்றைக் கருத்திற்கொள்ளப்படும். விசேட சித்திக்கு 4 புள்ளிகளும், அதி திறமைச் சித்திக்கு 03 புள்ளிகளும், திறமைச் சித்திக்கு 02 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 01 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதானமாக 08 பாடங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

8. **பாடநெறிக்காக விண்ணப்பிக்க அல்லது சேர்வதற்கு தகைமையற்றவர்கள் :**

8.1 ஏற்கனவே அரச அல்லது தனியார் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்கள்

8.2 அரச பாடசாலையில் நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள்

8.3 தேசிய கல்விக் கல்லூரியில் பாடநெறியைத் தொடரும் அல்லது தொடர்ந்தவர்கள்

8.4 பல்கலைக்கழகம்/பல்கலைக்கழக நிறுவகம்/ஏனைய உயர்கல்வி நிறுவகம்/க. பொ. த. (உ.த.) தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் பாடநெறிக்கு பதிவுசெய்துள்ள/தொடரும் அல்லது பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பூர்த்திசெய்துள்ளோர். (தற்போது மேற்கூறிய நிறுவனங்களில் பதிவுசெய்துள்ள மாணவர்கள் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர் பதிவு இரத்து செய்யப்பட்டிருப்பின் அவர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாகும்)

8.5 ஒழுக்காற்று செயற்பாடுகளின் அடிப்படையில் தேசியக் கல்விக் கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்டவர்கள்.

9.0 **பயிற்சிக்கான நிபந்தனைகள் :**

9.1 பயிற்சிப் பாடநெறியின் காலஎல்லை 03 ஆண்டுகளாகும். இது தேசிய கல்விக் கல்லூரிகளில் 02 வருடங்கள் வதிவிடப் பயிற்சி பெற்றதன் பின்னர் பாடசாலைகளுக்கு இணைப்பு செய்து ஒரு வருடகாலம் சேவைக்காலப் பயிற்சியும் உள்ளடங்குகிறது. இரண்டாவது ஆண்டின் இறுதியில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பயிலுனர்களின் சமுகமளிப்பு 90% ஐ விடக் குறையாதிருக்க வேண்டும்.

9.2 சகல பயிலுனர்களும் முதலாவது ஆண்டில் மற்றும் இரண்டாவது ஆண்டில் நடாத்தப்படும் தொடர்ச்சியான உள்ளகப் பரீட்சைகளிலும் இரண்டாம் ஆண்டில் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகளிலும் இரண்டாவது ஆண்டில் இறுதியாக நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகளிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அத்துடன் ஆங்கில மொழிமூல பாடநெறியைத் தொடருகின்றவர்கள் தவிர்ந்த ஏனையோர் சகல பாடநெறிகளைத் தொடர்கின்றவர்கள் மேற்கூறப்பட்ட பரீட்சைகளின் ஆங்கில மொழியில் சித்தியடைய வேண்டும். விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டியது இந்நிபந்தனைகளுக்கு இணங்குபவர்கள் மாத்திரம் ஆகும்.

9.3 பயிலுனர்கள் தங்கிப் பயிற்சி பெறும் 02 வருடங்களுக்குள் ஒரு வருடத்திற்கு 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூ. 2,500 பெறுமதி கொண்ட உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். பயிற்சிக்கால அமர்வின்போது 10 மாதங்களுக்காக மாதமொன்றிற்கு 3,000 வீதமும் கொடுப்பனவு செலுத்தப்படும். சொந்தத் தேவைகளுக்கான செலவுகளை பயிலுனர்களால் மேற்கொள்ள வேண்டும்.

9.4 பயிற்சிபெறும் காலத்திற்குள் பயிலுனர்கள் பல்கலைக்கழகம் ஒன்றில், பல்கலைக்கழக கல்வி நிறுவகம் ஒன்றில் உயர்தர தகைமைகளுடன் சேர்த்துக்கொள்ளப்படும் ஏனைய நிறுவனமொன்றின் பாடநெறியில் உள்ளக மாணவராக கற்கைப் பாடநெறியைத் தொடர எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறிகளில் கலந்துகொள்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் பயிலுனர் ஒப்பமிடுகின்ற பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதியை (ரூ. 5,00,000) மீளஅறவிட்டு பாடநெறியிலிருந்து நீக்கப்படும்.

9.5 பயிற்சிபெறும் கால எல்லையில் பயிலுனர்கள் திருமணமாகும் பட்சத்தில் மாணவர் என்ற அந்தஸ்து இரத்தாகிறது. தேரர்கள்/மதகுருமார்கள் ஆகியோர் பதிவுசெய்ததன் பின்னர் சாதாரண வாழ்க்கைக்கு தம்மை மாற்றிக்கொள்வதன் மூலமும் பாடநெறியிலிருந்து நீங்க வேண்டியேற்படும். பயிற்சியை முடித்துக்கொண்டதன் பின்னர் சகல சமயங்களுக்குமுரிய சமயத் தலைவர்கள் துறவி வாழ்க்கையைக் கைவிடுவதில்லையென்று சுமார் 05 வருடங்களுக்கு கல்வி அமைச்சுக்கு சேவையாற்றுவதாக கல்வி அமைச்சுடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்துக்கு உடன்பட வேண்டும்.

9.6 பயிற்சிக் காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட பழக்கவழக்கங்கள் உட்பட ஆர்வம் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்காத பயிலுனர்கள் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். அத்துடன் பயிற்சியின் முதலாவது ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்போது திருப்திகரமான மட்டத்தை அடையத்தவறும் அல்லது 9.4 வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறியைத் தொடர்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் பாடநெறியிலிருந்து நீக்கப்படும். இது தொடர்பாக கல்வி அமைச்சின் கல்வியியல் நிறுவக சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

9.7 பயிற்சிபெறும் கால எல்லைக்குள் பயிலுனர்களின் உடல் உள பொருத்தம் தொடர்பாக பீடாதிபதி அல்லது தொழிற்பயிற்சிக் கால எல்லைக்குள் அதிபரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும் விசேட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும். இதன் அறிக்கை கல்வியியல் கல்லூரி நிறுவக சபைக்கு சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

9.8 பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் பயிலுனர்களுக்கு தேசிய போதனாவியல் டிப்ளோமா வழங்கப்படும். பாடநெறி சார்ந்த பணிகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாக பங்கேற்கவேண்டிய பாட இணை செயற்பாடுகள் உட்பட) பயிற்சிக் காலத்திற்குள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவதுடன் இம்மதிப்பீடு தேசிய போதனாவியல் டிப்ளோமா வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டுப் பிரிவாகும்.

9.9 இப்பாடநெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் இவ்வறிவித்தலின் 5.2.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கஷ்ட மாவட்டங்களின் கல்வி வலய மட்டத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்காக கருத்திற்கொள்ளப்படும் :-

9.9.1 கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளை ஆங்கில மொழி மூலம் கற்கும் பயிலுனர்கள் அவர்கள் நியமனம் பெறும் பாடசாலையில் ஆங்கில மொழி வெற்றிடம் இல்லாதபட்சத்தில் தமது தாய்மொழியான (சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம்) கற்பிக்க வேண்டும்.

9.9.2 எதிர்காலத்தில் அரச பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்போது இப்பயிற்சிப் பாடநெறியை பூர்த்திசெய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எனவே பாடநெறிக்காகத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கும் பட்சத்தில் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

9.9.3 மேற்கூறப்பட்ட நிபந்தனையின்கீழ் பயிற்சிபெறும் விண்ணப்பதாரர்கள் தாம் தேசிய கல்வியியற் கல்லூரிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்தில் கல்வி வலயத்தில் குறைந்தபட்சம் நியமனத் தினம் தொடக்கம் ஐந்து வருடங்கள் (05) கல்வி அமைச்சின்கீழ் சேவையாற்றுவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். நியமனம் வழங்கப்படும் கல்வி வலயம் எக்காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்படமாட்டாது.

9.10 தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவாகும் விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சிக்குச் செலவாகும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூ. 5,00,000 முறி ஒப்பமிட வேண்டும். பாடநெறியை இடைநடுவில் நிறுத்திவிட்டு அல்லது பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் 05 வருடங்கள் அரச சேவையில் இருக்காதவர் இம்முறியின் முழுமையான நிதியை அரசுக்குச் செலுத்தும் நிபந்தனைக்கு உட்பட வேண்டும்.

9.11 கல்வி அமைச்சினால் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற தேசிய கல்விக் கல்லூரியை, வைத்திய/ தனிப்பட்ட காரணங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு யாராவது ஒரு பயிலுனர் முயற்சிக்கின்றாராயின் அவர் தேசிய கல்விக் கல்லூரி ஒன்றுக்கு அனுமதிபெறுவதற்கு தகைமை பெற மாட்டார்கள்.

9.12 சகல கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும்.

10. **விண்ணப்பித்தல் :**

10.1 விண்ணப்பதாரர் ஒருவர் உயர்ந்தபட்சம் 03 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். ஒரு பாடநெறிக்கு இரண்டு மொழிகள் மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அதுவும் 02 பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாக கருதப்படும். அவ்வாறான விண்ணப்பதாரர்களுக்கு மற்றுமொரு பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். பௌத்த மதகுருமார் புத்த சமய பாடநெறிக்கும், கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய மதகுருமார் குறித்த சமய பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

உ-ம் : விஞ்ஞானம் பாடநெறி சிங்கள மொழி மூலம் மற்றும் விஞ்ஞானம் பாடநெறி ஆங்கில மொழி மூலம் ஆகிய இரண்டு மொழிகளுக்கும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு முடிவது மேலும் ஒரு பாடநெறிக்கு மாத்திரமாகும்.

10.2 ஒரு விண்ணப்பதாரியினால் ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் அதில் உறுதிசெய்யப்பட்ட 02 போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரு கடிதவுறையிலிட்டு சமர்ப்பிக்க வேண்டும். ஒரு விண்ணப்பதாரியினால் மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் உறுதிசெய்யப்பட்ட 02 போட்டோப் பிரதிகளைத் தவிர ஏனைய விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்திருப்பின் சகல விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

10.3 விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் மற்றும் மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்க வேண்டும்.

10.4 விண்ணப்பப்படிவம் 2011.07.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி), கல்விக் கல்லூரிக் கிளை, கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும்.

(கீழ்வரும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு கடிதவுறையை தயாரிக்கவும்.)

<table>
<tr><td colspan="2">"2012 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்".<br>முதலாவது விருப்பத்தைக் குறித்துக்காட்டும் பாடநெறி இலக்கம் ...................................... மொழி................................<br>ஸ்ரீபாத தேசிய கல்லூரிக்கு விண்ணப்பித்துள்ளீர்களா? ஆம்/இல்லை</td></tr>
<tr><td></td><td>பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி),<br>கல்விக் கல்லூரிக் கிளை,<br>கல்வி அமைச்சு,<br>இசுருபாய,<br>பத்தரமுல்ல.</td></tr>
</table>

(பரீட்சைத் திணைக்களத்திற்கு அல்லது தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பப்படிவங்களை அனுப்பக்கூடாதென்பதை கவனத்திற்கொள்ளவும்.)

10.5 கல்விக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்வது தொடர்பாக விளக்கங்கள் அல்லது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய பதிவுத்தபால் பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும். இதனால் அவற்றை விண்ணப்பதாரர் வைத்துக்கொள்ள வேண்டும்.

10.6 பரீட்சை இலக்கம், வருடம், பாடநெறி இலக்கத்தை சரியாகக் குறிப்பிடாத விண்ணப்பப்படிவங்களும் முறையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

10.7 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது.

10.8 விண்ணப்பப்படிவத்திற்கு வேறெந்தவொரு ஆவணத்தையும் இணைத்து அனுப்பக்கூடாது.

10.9 விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ் மோசடி செய்யப்பட்ட சான்றிதழ் என பின்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரி சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன் அரச சேவையில் எந்தவொரு நியமனத்தையும் பெற்றுக்கொள்ள தகைமையற்றவர் ஆகும்.

11. வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக கல்வியியலாளர் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12. வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமான வெளிப்படுத்தல்களில் ஏதாவதொரு தொடர்பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி வெளிப்படுத்துகையே அதிகாரபூர்வமானதாகும்.

எச். எம். குணசேகர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2011.............

**விண்ணப்பப்படிவங்களை தயாரிப்பதற்கான ஆலோசனை**

1. வர்த்தமானி அறிவித்தலை பல தடவைகள் கவனமாக வாசிக்கவும். தங்களுக்கு தகைமை கொண்ட 03 பாடநெறிகளுக்கு ஒரு விண்ணப்பப்படிவம் ஊடாக மாத்திரம் விண்ணப்பிக்கவும். இவ்விண்ணப்பப்படிவம் மற்றும் உறுதிசெய்யப்பட்ட 02 போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பவும். (பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் சமாதான நீதவான் ஊடாகவும் 2 போட்டோப் பிரதிகளை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.)

2. கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்திற்கமைய (Legal) F5 அளவில் (சென்ரிமீற்றர் 21.8 x 33) வெள்ளைநிறக் கடதாசியில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கவும். 1.0-9.5 வரை முதலாவது பக்கத்தில் உள்ளடங்கக்கூடியவாறு தயாரிக்கவும். கூட்டினுள் தகவல்களைக் குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பங்களில் உரிய கூட்டினுள் "X" இடுக.

3. விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்காக அவ்வவ் பாடநெறிக்காக கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும் கணனி பெயர்ப்பட்டியலை தயாரிக்கும் பட்சத்தில் முதற்பக்கத்தில் 1.0-9.5 வரையான தகவல்களை உள்ளடக்க வேண்டுமென தயவாய் கருத்திற்கொள்ளவும். விசேடமாக பாடநெறி இலக்கம் க. பொ. த. (உ. த.) பரீட்சை இலக்கம் "Z" பெறுமதியை சரியானது என உறுதிசெய்யவும். ஓர் இலக்கத்திற்கு மேலால் வேறு இலக்கத்தை எழுதுதல் அல்லது தெளிவற்ற விதத்தில் குறிப்பிடுதல் பிழையான தகவல்கள் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் தயவாய்க் கருத்திற்கொள்ளவும்.

4. உடற்கல்வி பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 12.0 வாசகத்திலும், புத்தசமயம், பாடநெறிக்கான விண்ணப்பப்படிவம் 13.0 வாசகத்திலும் கத்தோலிக்க/கிறிஸ்தவ சமயப் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 14.0 வாசகத்திலும் இந்து சமயம்/இஸ்லாம் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 15.0 வாசகத்திலும் தொழில்நுட்பக் கற்கைக்காக 16.0 வாசகத்திலும், மேற்கத்திய சங்கீதத்திற்காக 17.0 வாசகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் கருத்திற்கொள்ளப்படும். இதனால் அவற்றை சரியாக நிரப்ப வேண்டும். இவற்றைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

5. **மாவட்டங்களுக்குரிய இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன :-**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 01 | அம்பாந்தோட்டை | 09 | அம்பாறை | 17 |
| கம்பஹா | 02 | யாழ்ப்பாணம் | 10 | புத்தளம் | 18 |
| களுத்துறை | 03 | கிளிநொச்சி | 11 | குருணாகல் | 19 |
| மாத்தளை | 04 | மன்னார் | 12 | அனுராதபுரம் | 20 |
| கண்டி | 05 | முல்லைத்தீவு | 13 | பொலனறுவை | 21 |
| நுவரெலியா | 06 | வவுனியா | 14 | பதுளை | 22 |
| காலி | 07 | திருகோணமலை | 15 | மொனராகலை | 23 |
| மாத்தறை | 08 | மட்டக்களப்பு | 16 | கேகாலை | 24 |
| | | | | இரத்தினபுரி | 25 |

6. மொழிக்காக உரிய குறியீட்டைக் குறிப்பிடுக : சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

**ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றை பயிலுவதற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் - 2012**

(விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் அதில் உறுதிசெய்யப்பட்ட 02 போட்டோப் பிரதிகளை மாத்திரம் ஒரே கடித உறையில் இட்டு அனுப்பவேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் 9 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை முதலாவது பக்கத்தில் உள்ளடக்கவும். தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்காக கணனிப் பெயர்ப்பட்டியலைத் தயாரிக்கவும். 1.0 – 9.5 வரையான தகவல்கள் மூலம்)

1.0

| விருப்பத் தொடர் | பாடநெறியின் இலக்கம் | தே. க. கல்லூரியின் இல. | பாடநெறியின் மொழிமூலம் S/ T/ E | பாடநெறி இலக்கம் (18) மற்றும் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (S/T/E) |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |

2.0 2.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) (In Block Letters) உ-ம் : MR. PERERA R. C :
Mr./ Miss :----.

2.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) (In Block Letters) :----.

3.0 நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கிலத்தில்) (In Block Letters) :----. தொலைபேசி இல. :----.

4.0 தமிழ்மொழி மூல வர்த்தமானி அறிவித்தலில் 6.2.3 பந்திக்கமைய- மாவட்டம் :----.

மாவட்ட இலக்கம் : ☐

5.0 5.1 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 பால் (ஆண்/பெண்) : ஆண் 1 பெண் 2

7.0 இன வகை :

| சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்திய வம்சாவளியுடைய தமிழர் | முஸ்லிம் | ஏனையவை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

8.0 2010 ஆம் ஆண்டின் க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

8.1 ஆண்டு : ☐☐☐☐ பரீட்சைக்குத் தோற்றிய மொழி :----.

8.2 சுட்டிலக்கம் : ☐☐☐☐☐☐☐☐

8.3 Z புள்ளிகள் : ☐ Z புள்ளிகள் மறை ஆயின் குறித்த கூட்டில் M இலக்கத்தை குறிப்பிடவும். ☐

8.4 பெறுபேறு விபரம் பாடங்களுக்கமைய-

| பாடம் | பாட இல. | பெற்ற தரம் |
|---|---|---|
| 1. ............................... | ........................... | ........................... |
| 2. ............................... | ........................... | ........................... |
| 3. ............................... | ........................... | ........................... |

9.0 9.1 ஆங்கிலம் மற்றும் ஆங்கில மொழி பாடநெறிகளின் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு அல்லது ஆங்கில இலக்கியத்திற்கு பெற்ற அதியுயர் சித்தி :----. பாட இலக்கம் ☐☐

ஆண்டு : ☐☐☐☐

பரீட்சை இல. : ☐☐☐☐☐☐☐☐

9.2 தாங்கள் ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்றீரா? ஆம் 1 இல்லை 2

9.3 ஆம் எனின், தாம் தோட்ட ஊழியரின் பிள்ளையா என்பது குறித்து (உரிய கூட்டினுள் x இடுக)

ஆம் 1 இல் லை 2

9.4 உடற்கல்வி சிங்களம்/தமிழ் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் 12.0 பிரிவுக்காக உள்ளடக்கப்படும் புள்ளிகளின் மொத்தம் ☐

9.5 9.5.1.1 இரண்டாம் மொழி (சிங்களம்) பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழிக்கு (தமிழ்) பெற்ற அதி உயர் பெறுபேறு- ☐

பாட இலக்கம் ☐☐

9.5 9.5.1.2 இரண்டாம் மொழி (தமிழ்) பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டாம் மொழிக்கு (சிங்களம்) பெற்ற அதி உயர் பெறுபேறு- ☐

பாட இலக்கம் ☐☐

10.0 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் தாங்கள் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் தாங்கள் தோற்றியது ஒரு பாடத்திற்காயின் ஒவ்வொரு தவணைகளினதும் முழுமையான விபரங்களைக் குறிப்பிடுக :

| | 1 | 2 |
|---|---|---|
| 10.1 பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் | ........................... | ........................... |
| 10.2 ஆண்டு | ........................... | ........................... |
| 10.3 பரீட்சை இலக்கம் | ........................... | ........................... |
| 10.4 பரீட்சை மத்திய நிலையத்தின் இல. | ........................... | ........................... |
| 10.5 Z புள்ளிகள் | ........................... | ........................... |

10.6 சித்தி எய்திய பாடங்கள் மற்றும் தரம் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |
| ........................... | ........................... | ........................... | ........................... |

11.0 சித்தியடைந்த க. பொ. த. (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| 11.1 பரீட்சைக்குத் தோற்றும் தடவை : | ..................... | ..................... | ..................... |
| 11.2 வருடம் : | ..................... | ..................... | ..................... |
| 11.3 பரீட்சை இலக்கம் : | ..................... | ..................... | ..................... |
| 11.4 பரீட்சை மத்திய நிலைய இலக்கம் : | ..................... | ..................... | ..................... |
| 11.5 சித்தியடைந்த பாடங்கள் மற்றும் தரம் : | ..................... | ..................... | ..................... |

| (தவணை 1) | | (தவணை 2) | | (தவணை 3) | |
|---|---|---|---|---|---|
| பாடம் | தரம் | பாடம் | தரம் | பாடம் | தரம் |
| 1. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 2. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 3. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 4. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 5. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 6. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 7. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |
| 8. ............... | ............... | ............... | ............... | ............... | ............... |

12.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.4 வாசகத்தின் 4.4.3 மற்றும் 4.4.4 பிரிவுக்கமைய விளையாட்டுத் திறமை தொடர்பான விபரங்கள் (உடற்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் நிரப்பவேண்டும்.) இப்பிரிவைப் பூரணப்படுத்தும்போது 4.4.3 இலுள்ள சகல பிரிவுகள் தொடர்பாகவும் தங்கள் கவனத்தை செலுத்தவேண்டும். தாங்கள் பெற்றுள்ள உயரிய விளையாட்டுச் சான்றிதழ் /03 திறமைகளின் தகவல்களை மாத்திரம் சமர்ப்பிப்பது போதுமானதாகும். தாங்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றிருப்பின் 4.4.4 இற்கமைய தரத்திற்குரிய புள்ளியும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் முதலாவது பக்கத்தில் 9.4 இல் உள்ளடக்க வேண்டும்.

| தொ. இல. | ஆண்டு | வழங்கிய அமைச்சு/ நிறுவகம்/சங்கம் | போட்டியை பிரதிநிதித்துவப் படுத்திய மட்டம் சர்வதேசம்/ தேசிய/மாகாண/மாவட்ட வலய | நிகழ்ச்சி/ போட்டி | பெற்ற இடம் | 4.4.3 இற்குரிய புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3. | | | | | | |
| க. பொ. த. (சா. த.) சுகாதார மற்றும் உடற்கல்விப் பாடத்திற்குப் பெற்ற தரம் | | | | | புள்ளிகள் | |
| மொத்தப் புள்ளி | | | | | | |

13. வர்த்தமானி அறிவித்தலின் 4.6 பிரிவின் (அ) இற்கமைய பிராச்சீன ஆரம்பம், பௌத்த சமயம், பிரிவெனா இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் இருப்பின் உள்ளடக்கவும்.

| பரீட்சை | பிராச்சீன ஆரம்பம் | பௌத்த சமயம் | பிரிவெனா இறுதி | சமயப் பாடசாலை இறுதி |
|---|---|---|---|---|
| 13.1 ஆண்டு | | | | |
| 13.2 பரீட்சை இல. | | | | |
| 13.3 மத்திய நிலைய இல. | | | | |
| 13.4 பாட தரம் | 1<br>2<br>3<br>4 | 1<br>2<br>3<br>4<br>5<br>6 | 1<br>2<br>3<br>4<br>5<br>6<br>7<br>8<br>9<br>10<br>11 | |

14.0 வர்த்தமானி அறிவித்தலின் 4.9 வாசகத்திற்கமைய கத்தோலிக்க/கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரர்களினால் உரிய பகுதி பூரணப்படுத்த வேண்டும்.

| பாடநெறியின்/தராதரப் பத்திரத்தின் பெயர் | கால அளவு | | தரம் |
|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | |
| 14.1 தேவதர்மன சாஸ்திரம் (BTH) | | | |
| 14.2 தேசிய இறையியல் கிறிஸ்தவ கோட்பாடுகள் தொடர்பான பாடநெறி | | | |
| 14.3 தேசிய சமயபோதனை மத்திய நிலையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க சமய ஆசிரிய சான்றிதழ் ஆசிரிய தராதரப் பத்திரம் (கத்தோலிக்கம்) | | | |
| 14.4 தேவதர்ம விடுதிகளினால் நடாத்தும் கத்தோலிக்க சமயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் | | | |
| 14.5 துறவிகளுக்கான சமய கல்வி பயிற்சி பாடநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்வதாக துறவி விடுதியின் பொறுப்பாளர்/ஆசிரியரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் | | | |
| 14.6 தேசிய கிறிஸ்தவ சபையினால் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல் | | | |
| 14.7 பிலிமத்தலாவை சாஸ்திர நிலையத்தினால் நடாத்தப்படும் டிப்ளோமா தராதரப் பத்திரம் | | | |
| 14.8 கத்தோலிக்க/கிறிஸ்தவ ஆசிரியராக எடுக்க பொருத்தமானவர் என கத்தோலிக்கர்களுக்கான ஆயர் பதவி சான்றிதழ்/கிறிஸ்தவர்களுக்கான தேசிய கிறிஸ்தவ சபையின் சான்றிதழ் | | | |
| 14.9 க. பொ. த. (உ.த.) கிறிஸ்தவ சமய பாடத்திட்டத்தில் சித்தி பெற்றிருத்தல் | | | |

15.0 வர்த்தமானியில் கொடுக்கப்பட்டுள்ள 4.7 மற்றும் 4.8 க்கு இணங்க இந்து சமயம்/இஸ்லாம் ஆகிய பாடநெறிக்கான விண்ணப்பதாரிகள் கீழ்காணும் பகுதி நிரப்பப்படவேண்டும்.

| பாடநெறியின் பெயர் | கால அளவு | சான்றிதழ் செயற்படும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

16.0 வர்த்தமானி அறிவித்தல் 4.12 பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்களால் கீழ்க்காணும் பகுதி பூர்த்தி செய்யப்படவேண்டும்.

16.1 விண்ணப்பிப்பது ஆக்கவியல் மற்றும் தொழில்நுட்பம்/சிற்பக் கலை என்பது தொடர்பில் :----.

16.2 ஒரு தகுதி வாய்ந்த அரசாங்க கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் தொழில்நுட்பக் கல்வி பாடநெறியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்து கல்விக் கல்லூரிகளில் தொழில்நுட்பப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4.12.1.4/ 4.12.2.3 பகுதிக்கு அமைவாக நிரப்பப்படவேண்டியது-

| தொழில்நுட்ப பாடநெறியின் பெயர் | பதிவுசெய்த திகதியும் பதிவு இலக்கமும் | கல்விநிலையம் | பாடநெறியின் கால எல்லை | பாடநெறி திருப்திகரமாக பூர்த்திசெய்யப் பட்டுள்ளதா? |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

17.0 வர்த்தமானி அறிவித்தலில் 4.16.1, 4.16.2 வாசகங்களுக்கமைய மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்கான விண்ணப்பதாரர்கள் சங்கீதம் தொடர்பான திறனுக்குரிய தகவல்களை உள்ளடக்க வேண்டும் :

| ஆண்டு | சான்றிதழ் வழங்கிய நிறுவகம் | திறன்/சித்தியடைந்த வகுப்பு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

18.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) என்னால் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதி ஆகிய 02 மாத்திரம் ஆகும். ஒரு விண்ணப்பப்படிவம் மற்றும் அதன் போட்டோப் பிரதிகள் இரண்டைவிட அதிகமாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் எனது சகல விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும் என்பதனை நான் அறிந்துள்ளேன்.

(ii) என்னால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என உறுதிசெய்கிறேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதென தெரிய வரும் பட்சத்தில் நான் தேர்ந்தெடுக்க தகைமையற்றவர் என்றும் தேர்ந்தெடுத்ததன் பின்னர் பிழையான தகவல்கள் தெரியவரும் பட்சத்தில் எனது தெரிவை இரத்துச்செய்ய முடியும் என்பதனையும் நான் அறிந்துள்ளேன்.

(iii) நான் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கவில்லை என்பதுடன் பல்கலைக்கழகம்/பல்கலைக்கழக நிறுவகம்/ஏனைய உயர்கல்வி நிறுவகத்தில் பதிவுசெய்யவில்லை என்றும் பாடநெறியைத் தொடரவில்லையென்றும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

19. **பாடசாலை/பிரிவெனா பரீட்சார்த்திகள் தொடர்பில் அதிபர்/பிரிவெனா பொறுப்பாளரின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பதாரி இப்பாடசாலையின்/பிரிவெனா மாணவராக க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு மற்றும் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு பிராச்சீன ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றியதாகவும் விண்ணப்பதாரியினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு

எட்டியவரையில் சரியானது என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறு குறிப்பிற்கமைய ............................ ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையின் விண்ணப்பதாரி பெற்றுள்ள இதன் பெறுமதி .................................. (எழுத்தில்) ............................................................ என்றும் உறுதிசெய்கிறேன்.

----,
அதிபர்/பிரிவெனா தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

பாடசாலை அதிபரின்/பிரிவெனா பொறுப்புத் தலைவரின் பெயர் :----.
பாடசாலை/பிரிவெனாவின் பெயர் மற்றும் முகவரி :----.
திகதி :----.

20. **தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தொடர்பான உறுதியுரை :**

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ பெறுபேற்றுக் குறிப்பிற்கமைய ........................ ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நான் பெற்ற மொத்தப் புள்ளி/ "Z" புள்ளி ................................. (எழுத்தில்) ........................................................... என உறுதிசெய்கிறேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

----,
சமாதான நீதவானின் கையொப்பம்.
பெயர் :----.
பதவி :----.

திகதி :----.

6-488

---

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2011

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இல் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்னும் பதம் அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும். "சேவை" என்ற பதம் இலங்கை நிருவாக சேவை எனப்பொருள்படும்.

2. **பரீட்சைத் திகதி.**- இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் ஒற்றோபர் மாதம் கொழும்பு நகரத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச்செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

*எழுத்துமூலப் பரீட்சை.*- இப்பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) பொது விவேகம் ;
(ii) கட்டுரையும் சுருக்கமும் ;
(iii) பொது அறிவு ;
(iv) முகாமைத்துவ உளச்சார்பு.

*வாய்மூலப் பரீட்சை.*- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கிடையில் போதுமானதென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்/அமைச்சரவையால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பில் கட்டமைப்பு முறையில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை செயலாளர் தீர்மானிப்பார்.

3. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது இருப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு/அமைச்சரவைக்கு அதிகாரம் உண்டு.

*4.* **சேவை நிபந்தனைகள்**.- *அரச சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட) 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதும், வருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் அமைய தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் சேவையின் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படுவர்.*

4.1 இப்பரீட்சையின் மூலம் நிரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 46 ஆகும்.

4.2 தெரிவுசெய்யப்படுவோர் நியமனத் திகதி முதல் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் வடக்கு/கிழக்கு மாகாணங்களில் சேவையாற்ற வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமிடத்து அவர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

4.3 தனக்கு அளிக்கப்பட்ட பதவியின் கடமைகளை குறித்த திகதியில் பொறுப்பேற்கத் தவறும் அல்லது/அத்துடன் நியமிக்கப்பட்டதொரு பதவியில் அல்லது/ அத்துடன் நியமிக்கப்பட்டதொரு பிரதேசத்தில் கடமையை ஏற்க மறுக்கும் அல்லது அலட்சியப்படுத்தும் விண்ணப்பதாரர்களின் நியமனங்கள் இல்லாதொழிக்கப்படும்.

4.4 விசேட பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படும் அலுவலர்கள் இலங்கை நிருவாக சேவையின் அலுவலர்களுக்கான I ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு மேலதிகமாக 3 வருடங்களுக்குள் சிங்கள மொழிப் பரீட்சையில் சித்திபெற வேண்டும்.

5. **கட்டமைப்பும் மாதாந்த வேதன அளவுத்திட்டமும்:**

| | | | |
|---|---|---|---|
| விசேட தரம் | : ரூபா 42,390 - 12 × 1,310 | - ரூபா 58,110 |
| வகுப்பு I | : ரூபா 36,755 - 17 × 1,050 | - ரூபா 53,555 |
| வகுப்பு II | : ரூபா 30,175 - 8 × 790 | - ரூபா 35,705 |
| வகுப்பு III | : ரூபா 22,935 - 10 × 645 | - ரூபா 29,385 |

*(நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதிக்குள் 1 ஆவது வினைத்திறன்காண் தடையும், நியமனத் திகதியிலிருந்து 06 வருட காலப்பகுதிக்குள் 2 ஆவது வினைத்திறன்காண் தடையும் சித்தியடைய வேண்டுமென்பதுடன் நியமனம் கிடைக்கப்பெற்று 5 ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 இன் பிரகாரம் இரண்டாவது அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)*

*இப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்படுகின்றன.*

6. **உடல் நிலைமையும் ஒழுக்கமும்**.- பரீட்சார்த்தி நல் உடல் நிலையுடையவர் என்பதிலும், நல்லொழுக்கமுடையவர் என்பதிலும் செயலாளர் திருப்தியடைதல் வேண்டும். அவர் நல்ல கண் பார்வை உடையவராகவும் இருக்க வேண்டுமென்பதுடன் இத்தீவில் எப்பகுதியிலேனும் சேவையாற்றத்தக்க உடல்நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும்.

7. **தகைமைகள்**.- இதற்காக தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர் பின்வரும் தகைமைகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும் ;

(அ) பல்கலைக்கழக பட்டம் வலுப்பெறும் திகதி 2011.07.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாக இருத்தல் வேண்டும் ;

(iii) குறித்த பட்டத்தை தமிழ் மொழி மூலம் கற்றிருத்தல் அல்லது பட்டத்தின் ஒரு பாடமாக தமிழ் மொழி கற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்றிருத்தல் வேண்டும் ;

(iv) 2011.07.25 ஆந் திகதி 28 வயதை அடைந்திருத்தல் ஆகாது ;

(v) நல்லொழுக்கத்துடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும் ;

(vi) ஏதேனுமொரு சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்தில் உள்ள எந்தவொரு நபரும் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்

**குறிப்பு** :

(i) இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின் 5(1) அல்லது 5(2) இன்படி இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு இரண்டு முறைகளுக்கு மேலாக தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க தேவையான தகைமைகள் 2011.07.25 ஆந் திகதியில் எல்லாவகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்காக செலுத்த வேண்டும். மாவட்டச் செயலகத்திலிருந்து/பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன் அதை 8 1/2 "x 12" A4 அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். 1 தொடக்கம் 2 வரையிலான கூடுகளை விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் ஏனைய கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தில் நிழற்பட பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி பரீட்சார்த்தியினாலேயே விண்ணப்பம் சரியாக பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்னும் முகவரியிடப்பட்டு 2011.07.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை 2011" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது பரீட்சையின் பெயர் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதுவது இன்றியமையாததாகும்.

(ஈ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360 இற்கு மேற்பட்ட அடிப்படை ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. இலங்கை பரீட்சை திணைக்களம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பியதும், அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தாங்கள் வைத்திருந்த விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகளும் பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டும் கொழும்புக்கு வெளியிடமாயின் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய பெக்ஸ் இலக்கமும் குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதத்தையும் உடன் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

10. **பரீட்சைக்கு அனுமதி**.- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தனது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்கு தோற்றும் மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே அம்மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ்வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்ட விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது.

11. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப் படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை.**- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியஅளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

13. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்/ அமைச்சரவையின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **பரீட்சை முறையும் பரீட்சை மொழியும்.**- பரீட்சை தமிழ் மொழி மூலம் மட்டும் நடத்தப்படும்.

15. **தெரிவுசெய்யும் முறை.**- பின்வரும் பாடங்களைக் கொண்ட ஒரு எழுத்துப் பரீட்சை :-

| | | | |
|---|---|---|---|
| (i) | பொது விவேகம் | (1 மணித்தியாலம்) | - 100 புள்ளிகள் |
| (ii) | கட்டுரையும் சுருக்கமும் | (2 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |
| (iii) | பொது அறிவு | (2 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |
| (iv) | முகாமைத்துவ உளச்சார்பு | (2 மணித்தியாலங்கள்) | - 100 புள்ளிகள் |

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

வாய்மொழித் தேர்வு - 25 புள்ளிகள்

எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் தகைமை பெற்றவர்கள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவால்/ அமைச்சரவையால் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானதென விதித்துரைக்கப்படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் போதிய அளவு இருப்பார்களாயின் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர்.

(புள்ளி வழங்கும் முறை நியமன அதிகாரியால்/ அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.)

16. எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் திறமை ஒழுங்கின்படி நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதை நியமனம் வழங்குவதற்கான தகைமையாக கருதுதல் ஆகாது.)

17. நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவால்/அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும்.

18. **பாடத்திட்டம்** :

(i) *பொது விவேகம் (1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்).*- சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் சோதிப்பதன் மூலம் அவற்றை கிரகிப்பதில் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும்.)

(ii) *கட்டுரையும் சுருக்கமும் (2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்).*- தரப்பட்ட தலைப்புக்கள்/தொனிப்பொருட்கள் பலவற்றில் இருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவுசெய்துகொள்ளும் தலையங்கங்கள்/ தொனிப்பொருள்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் சமர்ப்பித்தல், ஒன்று திரட்டல் மற்றும் பரப்புதல் என்பவற்றில் பரீட்சார்த்திக் உள்ள தர்க்க ரீதியான சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் ஒன்றை அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து அதன் முக்கிய கருத்துக்களை தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் கருத்துக்களை தெரிவிப்பதில் அவருக்கு உள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(iii) *பொது அறிவு (2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்).*- தேசிய ரீதியிலும் வலய ரீதியிலும் உலகில் பல அமைப்புச் சுற்றாடல்களினுள் போன்று எமது சமூகத்தில் நிலவுகின்ற சமூக, கலாச்சார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் பரீட்சார்த்தி அடைந்துள்ள அறிவையும் புரிந்துணர்வையும் அறவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும்.)

(iv) *முகாமைத்துவ உளச்சார்பு (2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்).*- பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் இனம் காணுதல், தீர்மானமெடுத்தல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளை நடாத்திச் செல்லுதல், தொடர்புத் துறைகளிலான திறமை, சுய ஒழுக்கக் கொள்கை மற்றும் உபாய வழிமுறைகளை தயாரித்தல் ஆகிய வகையில் பரீட்சார்த்தி ஒருவரிடம் உள்ள சிறந்த

முகாமைத்துவ திறமைகளை அவரிடம் முன்வைக்கப்படும் சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்களையும் குறுகிய விடைகளுக்கான வினாக்களையும் உள்ளடக்கும்.)

அமைச்சரவையின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2011, யூன் மாதம் 06 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விசேட திறந்த போட்டிப் பரீட்சை - 2011**

SPECIAL OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO FILL THE VACANCIES IN CLASS III OF SRI LANKA ADMINISTRATIVE SERVICE FOR NORTH AND EAST PROVINCE - 2011

1.0 தனிப்பட்ட தகவல்கள் .-

1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

உதாரணம் : SILVA, A. B.

1.2 முழுப்பெயர் ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் :-----.

1.3 முழுப்பெயர் (தமிழில்) :-----.

1.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) :-----.

1.5 நிரந்தர முகவரி (தமிழில்) :-----.

1.6 தொலைபேசி இல. : | | | | | | | | | | |

1.7 பால் : (ஆண் - 0, பெண் - 1) : [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

1.8 திருமணமானவரா? திருமணமாகாதவரா? (திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2) : [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

1.9 இனத்தொகுதி (சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) : [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

1.10 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

1.11 பிறந்த திகதி.- ஆண்டு : | | | | | மாதம்: | | | திகதி : | | |

1.12 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது.- வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

2.0 இலங்கை நிருவாக சேவைக்கு நியமனம் செய்வதற்காக இதற்கு முன் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டுகளைக் குறிப்பிடவும் : -----.

(அ) :-----. (ஆ) :-----. (இ) :-----.

3.0 க. பொ. த. (உ. த.) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு :-----. பரீட்சை இலக்கம் :-----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |

4.0

(i) பட்டம் பெற்ற திகதி :-----.
(இத்தகைமைகள் உள்ளனவா என்பதைப் பார்ப்பதற்காகத் தயவுசெய்து அறிவித்தலின் 7 (ii) ஐ நன்றாக வாசிக்கவும்.)
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-----.
(iii) பதிவு இலக்கம் :-----.
(iv) வெளிவாரி/உள்வாரி :-----.
(v) பட்டம் :-----.
(vi) மொழிமூலம் :-----.
(vii) பாடங்கள் :-----.
(viii) வகுப்பு :-----.
(ix) மேல்தரம்/குறைந்த :-----.
(x) சுட்டெண் :-----.
(xi) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :-----.

5.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை நன்கு இதில் ஒட்டிவிடவும் :-

(பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.)
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனப்படலாம்.)

6.0 பரீட்சார்த்தியின் சான்றுரை.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ....................... ஆம் இலக்க ....................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்** (வர்த்தமானி அறிவித்தலின் 9(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ................................ (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ....................... ஆந் தகிதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

................,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)
திகதி :----.

6-523

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.